# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

## ஆகஸ்ட் 2010 ஜீவியம் 16 மலர் 4

இம்மாத மலரில். . . .

## பொருளடக்கம்

பக்கம்

இந்தியாவைப் பற்றிச் சில கருத்துகள் ........ 2
சாவித்ரி ........ 11
அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு ........ 13
லைப் டிவைன் ........ 24
இம்மாதச் செய்தி ........ 32
தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் ........ 33
அன்பர் கடிதம் ........ 34
பூரணயோகம் - முதல் வாயில்கள் ........ 35
லைப் டிவைன் - கருத்து ........ 38
காதலரும், காவலரும் ........ 41
அஜெண்டா ........ 50
யோக வாழ்க்கை விளக்கம் V ........ 53

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

### ஜீவியத்தின் ஓசை

உள்ளும் புறமும் உணர்ந்து செயல்பட்டால் முடியாதது உடனே முடியும்.

நன்றி உடலில் சைத்தியப் புருஷன் செய்யும் வேலை.

பலனுக்குக் காத்திருப்பது பொறுமை. பலன் வந்து-விட்டதாக நினைத்து நடப்பது அவசரம்.

கண்ணில் பட்டால் ஜீவன் அகலாது. அதைவிட்டு அகலவே அகலாது.

# இந்தியாவைப் பற்றிச் சில கருத்துகள்

N. அசோகன்

| வ. எண் | இந்தியாவின் இன்றைய நிலையும் | இந்தியாவில் வரவேண்டிய மாற்றங்களும் |
|---|---|---|
| 1. | மேலை நாடுகளின் ஐஸ்வரியத்தையும், டெக்னாலஜியையும் இந்தியா விரும்புவதால் அந்நாடுகளின் தலைமையை ஏற்று அவற்றைப் பின்தொடர்ந்து கொண்டிருக்கிறது. | உறவு நாடுகளுக்கு ஆன்மீகத் தலைவனாக இந்தியா தலை எடுக்க வேண்டும். ஏனெனில் அதுதான் இந்நாட்டின் ஆன்மீக விதியாகும். அப்படி தலை எடுக்கும்பட்சத்தில் மேலை நாடுகள் இந்தியாவைப் பின்பற்றுவார்கள். |
| 2. | வளரும் நாடுகள் பலவற்றில் இந்தியா இப்பொழுது ஒன்றாக உள்ளது. | அடுத்து 20 அல்லது 30 ஆண்டுகளில் தேசிய வருமானத்திலும் மற்றும் தனி நபர் வருமானத்திலும் இந்தியா அமெரிக்காவிற்கு நிகராகவோ, அமெரிக்காவைத் தாண்டியோ வர வேண்டும். |
| 3. | இந்நாட்டு இளைஞர் சமுதாயம் இன்னமும் சம்பளத்தில் வேலை செய்வதிலுள்ள பாதுகாப்பையே நாடிக் கொண்டிருக்கிறார்கள். | இப்படிப் பாதுகாப்புத் தேடும் மனோபாவத்தை விட்டுவிட்டு சுயதொழிலில் இறங்கி தேசத்தை வளப்படுத்தி, தம்மையும் வளப்படுத்திக் கொள்ள வேண்டும். |
| 4. | சமூகத்திற்குக் கட்டுப்பட்டுப் பெரும்பான்மையானவர்-களுடைய சமூகப் பண்புகளுக்கு ஒத்துப் போவதுதான் தற்போது இலட்சியமாக உள்ளது. | அவரவருடைய தனித்தன்மையை வளர்த்துக் கொண்டு சொந்தமாக ஒரு வாழ்க்கைப் பாணியை அமைத்துக் கொள்வதுதான் இலட்சியமாக இருக்க வேண்டும். |
| 5. | அமெரிக்க மற்றும் மேலைநாட்டுக் கலாச்சாரம் இந்தியாவில் பாகுபாடு இல்லாமல் பரவிக் கொண்டிருக்கிறது. | இந்தியா தன்னுடைய அடிப்படை கலாச்சாரத்திற்கும், பண்புகளுக்கும் ஒத்துப் போகும் அளவிற்குத்தான் மேலை நாட்டுக் கலாச்சாரத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒத்துப் போகாத விஷயங்களை ஒதுக்கிவிட வேண்டும். |
| 6. | அரசாங்க ஆதரவு மற்றும் மானியம்என்று இவற்றை நம்பிக் கொண்டிருப்பதால் மக்களிடையே அரசாங்கத்தை நம்பி வாழும் மனோநிலை ஏற்பட்டுள்ளது. | இப்படி மானியங்களையும், அரசாங்க ஆதரவையும் நம்பி வாழும் மனநிலை போக வேண்டும். சொந்தமாகப் பிழைக்கக்கூடிய மனோதிடம் மக்களுக்கு வரவேண்டும். |
| 7. | வீடுகளிலும், பொது இடங்களிலும் சுத்தம் மிகவும் குறைவாக உள்ளது. | மற்றும் மேலை நாடுகளிலுள்ள அதே சுத்தம் இங்கும் வரவேண்டும். |
| 8. | மனப்பாடம் செய்வதற்கும், தேர்வெழுதி தேர்ச்சி பெறவும்தான் இந்தியக் கல்வித் திட்டம் உதவுகிறது. | சிந்தனையையும், படைப்புத் திறனையும் தூண்டிவிடும் வகையில் நம் நாட்டின் கல்வித் திட்டத்தையும், பாடத் திட்டத்தையும் மாற்றி அமைக்க வேண்டும். |
| 9. | அரசாங்க அலுவலகங்களில் ஊழல் மலிந்து இருக்கிறது. | அரசாங்க அதிகாரிகள் இலஞ்சம் வாங்குவதை இழிவாக நினைத்து அதனைக் கைவிட வேண்டும். மேலும் இலஞ்சம் வாங்க தேவையில்லாத அளவிற்கு அவர்களின் வருமானம் உயர வேண்டும். |
| 10. | திருமணங்கள் வரதட்சணையை மையமாக வைத்து வியாபாரம் போல் நிகழ்த்தப்படுகிறது. | திருமணத்திலிருந்து வரதட்சணை அறவே நீக்கப்பட வேண்டும். அன்பின் அடிப்படையில் திருமணங்கள் நடைபெற வேண்டும். |

| | | |
|---|---|---|
| 11. | சடங்கு, சம்பிரதாயங்களும் தேவையில்லாத நடைமுறைகளும் இன்னமும் பரவலாக இருக்கின்றன. | சடங்கு, சம்பிரதாயங்களிலிருந்து மக்கள் தம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். தேவையில்லாத பழக்க வழக்கங்களை விட்டுவிட்டுத் தங்களுடைய எனர்ஜி விரயமாவதைத் தவிர்த்துத் தங்கள் சாதிக்கும் திறனை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். |
| 12. | போட்டி மற்றும் அடுத்தவர்கள் கொடுக்கின்ற நிர்பந்தம்என்று இவற்றின் காரணமாகத்தான் மக்கள் சாதிக்க உந்தப்படுகிறார்கள். | இப்படி, போட்டி மற்றும் அடுத்தவருக்குச் சமமாக இருக்க வேண்டும்என்ற காரணங்கள் குறுக்கிடாமல் தானே சொந்தமாக சாதிக்க வேண்டும்என்ற ஆர்வத்தின் காரணமாக உந்தப்பட்டு சாதிக்க வேண்டும். |
| 13. | பொய் சொல்வது இங்கு பரவலான பழக்கமாக இருக்கிறது. கோர்ட்டில் சாட்சி சொல்பவர்கள்கூட பொய் சொல்லத் தயங்குவதில்லை. | பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலேய ஜென்டில்மேன் எப்படி நடந்து கொண்டானோ அப்படி இந்தியர்களும் நடந்து கொள்ள வேண்டும். |
| 14. | கம்யூட்டர் மற்றும் இன்டர்நெட் மூலம் கல்வியை மேம்படுத்திக் கொள்வது மற்றும் வேலைகளை முடித்துக் கொள்வது ஆகியவைகளைப் பற்றி மக்களுக்கு இன்னமும் தெரியாமல் உள்ளது. | ஒவ்வொரு மாணவ, மாணவியும் சொந்தமாக ஒரு கம்யூட்டர் வைத்திருக்க வேண்டும். இன்டர்நெட் மூலம் ஏராளமான விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். |
| 15. | இந்திய பொருளாதாரத்தில் ஒரு சிறு பிரிவுதான் முறைப்படுத்தப்பட்டு உள்ளது. | இந்தியப் பொருளாதாரம் முழுவதும் முறைப்படுத்தப்பட வேண்டும். |



| | | |
|---|---|---|
| 16. | Organisationனால் கிடைக்கின்ற பலன்களைச் சிறிதளவுதான் இந்நாடு அனுபவித்திருக்கிறது. | இந்தியப் பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும், Organisationனுடைய முழுப்பலனையும் நாம் பார்க்க வேண்டும். |
| 17. | சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் இந்தியர்களின் சாதனை மிகவும் குறைவாக உள்ளது. | இந்தியர்கள் நிறைய ஒலிம்பிக் பதக்கங்களை வாங்க வேண்டும். பதக்கம் வாங்குவதில் முதல் ஐந்து நாடுகளில் ஒன்றாக இந்தியா வர வேண்டும். |
| 18. | ஏதோ ஒரு சமயம்தான் இந்தியர்கள் நோபல் பரிசை வாங்குகிறார்கள். | ஏதேனும் ஒரு வருடத்திலாவது 6 பரிசுகளையும் இந்தியர்கள் வாங்க வேண்டும். |
| 19. | அண்டை நாடுகளான பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகியவற்றோடு இந்தியாவிற்கு சுமுகக் குறைபாடுள்ளது. | இந்த இந்தியத் துணைக் கண்டத்தின் ஆன்மீக ஒற்றுமை நடைமுறையிலும் உண்மையாக வேண்டும். அதாவது பாகிஸ்தான், வங்காள தேசம், நேபாளம், இலங்கைபோன்ற நாடுகளும் இந்தியாவுடன் இணைந்து காட்சியளிக்க வேண்டும். |
| 20. | இந்நாட்டின் ஆன்மீகப் பாரம்பரியம் இந்நாட்டு மக்களுக்கே சரியாகத் தெரியவில்லை. | இந்தியர்கள் இந்தப் பாரம்பரியத்தின் சிறப்பை உணர்ந்து இந்த ஆன்மீக சக்தியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தங்கள் வாழ்க்கையின் தரத்தையும் ஆன்மீக பலத்தைக் கொண்டு உயர்த்திக் கொள்ள வேண்டும். |
| 21. | இரு மாநிலங்களிலும் பாயும் ஆறுகள் பற்றி சர்ச்சைகள் எழுந்துள்ளன. | கங்கையும், காவிரியும் இணைக்கப்பட வேண்டும். நதி நீர் பங்கீடு பற்றிய சர்ச்சைகள் எல்லாம் மறைய வேண்டும். |

| | | |
|---|---|---|
| 22. | இந்தி கற்றுக் கொள்வது விஷயமாக, தமிழ்நாட்டில் ஒரு எதிர்ப்பு இருக்கிறது. | தமிழ் மக்கள் இந்தி கற்றுக் கொள்ள முன்வர வேண்டும். அப்படி கற்றுக் கொள்ளும்பட்சத்தில் தமிழ்நாடு தேசிய கலாச்சாரத்துடன் ஒன்றிணைய வேண்டும். |
| 23. | சிக்கலான அரசாங்க நடைமுறைகள் மக்களின் செயல்திறனை குறைக்கின்றன. மேலும் நாட்டின் வளர்ச்சியின் வேகத்தையும் குறைக்கின்றன. | அரசாங்க நடைமுறைகள் எளிமைப்படுத்தப்பட வேண்டும். செயல்திறன் மற்றும் செயல்படும் வேகம் அதிகரிக்கும் வகையில் இந்த நடைமுறைகள் அமைய வேண்டும். |
| 24. | மதம், மொழி, ஜாதிஎன்று இவற்றிலுள்ள பாகுபாடுகளையும், பிரிவினைகளையும் வலியுறுத்தி அரசியல் நடத்தப்படுகிறது. | இப்படிப்பட்ட பிரிவினையை வலியுறுத்தும் அரசியல் முடிவுக்கு வந்து தேசிய ஒற்றுமைக்கு முன்னுதாரணமான ஒரு நாடாக இந்தியா தலை எடுக்க வேண்டும். |
| 25. | இன்சூரன்ஸினுடைய பேராற்றலை இந்நாட்டு மக்கள் முழுமையாக உணரவில்லை. | இந்நாட்டின் பொருளாதாரத்தில் எந்தெந்தத் துறைகளில் எல்லாம் இன்சூரன்ஸைக் கொண்டுவர முடியுமோ அங்கெல்லாம் அதைக் கொண்டுவர வேண்டும். இப்படிச் செய்யும் பொழுது நாட்டின் உற்பத்தித் திறன் அதிகரிக்கும். |
| 26. | சாலையில் பிரயாணம் செய்பவர்களுக்கான பாதுகாப்பு மிகவும் குறைவாக இருக்கிறது. | எல்லா நெடுஞ்சாலைகளிலும் நடுவில் சாலை பிரிக்கப்பட வேண்டும். அப்படி பிரிக்கப்படும்பொழுது விபத்துகள் பெருமளவிற்குக் குறையும். |



| | | |
|---|---|---|
| 27. | பணபலம் மற்றும் அடியாள் பலம்என்று இவைதான் தேர்தல்களை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன. | தேர்தல்கள் மிகவும் நியாயமான முறையில் நடத்தப்பட வேண்டும். பணம் கொடுத்தோ அல்லது அடியாட்களை வைத்து மிரட்டியோ மக்கள் ஓட்டுப் போடும் நிலைமை மாற வேண்டும். |
| 28. | மாநகரங்களில் இருக்கின்ற சேரிகளும், குப்பங்களும் நகரங்களின் அழகைக் கெடுக்கின்றன. | இப்படி மாநகரங்களில் உள்ள குப்பங்கள் எல்லாம் அகற்றப்பட்டு எல்லோருக்கும் நல்ல வீட்டுவசதி அமைய வேண்டும். |
| 29. | பருவ மழையில் இருக்கின்ற ஏற்றத் தாழ்வுகளின் காரணமாகப் போதுமான நீர்வளம் கிடைப்பது அரிதாகிவிட்டது. | மழை நீர் சேகரிப்பு திட்டம், நதிகள் இணைப்புத் திட்டம் மற்றும் நீர் வளம் சம்பந்தப்பட்ட சரியான மேனேஜ்மெண்ட் முறைகள் என்று இவையெல்லாம் ஒன்று சேர்ந்து பருவ மழையில் உள்ள குறைபாடுகளைச் சரிசெய்ய வேண்டும். |
| 30. | ஆடம்பரமான திருமண வைபவங்கள் அவற்றை நடத்துகின்ற குடும்பங்களுடைய பொருளாதாரத்தை மிகவும் பாதிக்கின்றன. | திருமண நிகழ்ச்சிகள் மிகவும் எளிமையான நிகழ்ச்சிகளாக மாற வேண்டும். பொருளாதார ரீதியாகவும் செலவு குறைய வேண்டும். |
| 31. | ஒரு முறையில்லாமல் நகரங்கள் வளர்ந்துகொண்டு வருவது நகராட்சி அலுவலகங்களுக்கு ஒரு பெரிய தலைவலியாக உள்ளது. | கட்டிடங்களை விதிமுறைக்கு உட்பட்டு கட்ட வேண்டும். சாலைவசதி, குடிநீர் வசதி, மின்வசதிபோன்ற அடிப்படை வசதிகளை ஒழுங்காகச் செய்துதர வேண்டும். |

| | | |
|---|---|---|
| 32. | சுற்றுச் சூழலைப் பாதிக்கும் வகையில் நீர்வளம், நிலவளம் மற்றும் காற்றுமண்டலம் என்று எல்லாமே மாசுபடுத்தப்படுகிறது. | சுற்றுச் சூழலைப் பற்றிய விழிப்புணர்வு வர வேண்டும். அதன் பலனாக சுற்றுச் சூழல் மீண்டும் நலம்பெற வேண்டும். |
| 33. | ஜாதி அடிப்படையிலான இட ஒதுக்கீடு இருப்பதால் அரசாங்கவேலை மற்றும் கல்லூரிப் படிப்புவாய்ப்பு எல்லாம் இதன் அடிப்படையில்தான் நிர்ணயிக்கப்படுகிறது. | இந்தியா போதியளவு முன்னேற்றம் அடைந்துள்ளதால் இடஒதுக்கீடு தேவையில்லை. கல்லூரிப் படிப்பு மற்றும் அரசாங்க வேலையெல்லாம் எல்லோருக்கும் கிடைக்கும்படிச் செய்யலாம். |
| 34. | லாட்டரி மற்றும் ஷேர் விற்பது, வாங்குவதுபோன்று சுலபமான வழிகளில் பணம் சம்பாதிப்பதில் மக்கள் நிறைய ஆர்வம் காட்டுகிறார்கள். | இப்படிச் சுலபமாகச் சம்பாதிப்பதிலிருக்கும் நாட்டத்தை விட்டுவிட்டு சம்பாதிப்பதற்காகக் கடினமாக உழைக்க வேண்டும். |
| 35. | வரி ஏய்ப்பு பரவலாக உள்ளது. | அவரவர்கள் கட்ட வேண்டிய வரியை மக்கள் முறையாகக் கட்ட வேண்டும். |
| 36. | மக்கள் நிறைய நாட்கள் விடுமுறை எடுத்துக் கொள்கிறார்கள். | வருடத்தில் 12 நாட்களுக்கு மேல் விடுமுறை எடுக்காமல் இருக்க வேண்டும். |
| 37. | இந்தியாவின் பல மாநிலங்களில் பயங்கரவாதம், வன்முறை தலைவிரித்தாடுகிறது. | பயங்கரவாதத்திற்கு மூலகாரணமான ஏழ்மை முதலில் மறைய வேண்டும். இப்படி ஏழ்மை மறையும்பொழுது, ஏழ்மையால் விளைந்த வெறுப்புணர்வும் மறைந்து அதன் பலனாக வெறுப்புணர்வால் விளைந்த பயங்கரவாதமும் மறையும். |



| | | |
|---|---|---|
| 38. | சிறுபிள்ளைகளை வேலைக்கு வைப்பதால் அவர்களுக்கு படிக்கும் வாய்ப்பு பறிபோகிறது. | இது விஷயமாக, சட்டம் முறையாக அமல்படுத்தப்பட வேண்டும். அதன் பலனாகப் படிக்க வேண்டிய வயதில் பிள்ளைகள் எல்லோரும் படிக்க வேண்டும். |
| 39. | கூட்டுக் குடும்ப வாழ்க்கை குறைந்து வருவதால் வயதானவர்களுக்கு ஒரு சரியான பராமரிப்பு இல்லாமல் போகிறது. | முதியோர்களுக்குப் போதிய பராமரிப்பு வழங்கும் வகையில் ஒய்வூதியத் திட்டங்கள் மேம்படுத்தப்பட வேண்டும். |
| 40. | அணுகுண்டுகள் வைத்திருப்பதை இந்தியா பெருமையாக நினைக்கிறது. | அமைதியும், சமாதானத்தையும் உண்மையாக விரும்புவதற்கு அடையாளமாக இந்தியா தன் கைவசமுள்ள அணுகுண்டுகளை எல்லாம் கைவிட வேண்டும். |
| 41. | இந்தியாவினுடைய பெரிய ஜனத்தொகை ஒரு சுமையாகக் கருதப்படுகிறது. | கல்வி, மற்றும் முறையான பயிற்சியின் மூலம் இந்தப் பெரிய ஜனத்தொகை இந்தியாவிற்கு ஒரு பெரிய ஆதரவாக மாற வேண்டும். |
| 42. | இந்நாடு உலகத்தின் கண்ணோட்டத்தில் ஒரு விவசாயம் செய்கின்ற கிராமிய நாடாகத்தான் பார்க்கப்படுகின்றது. | அமெரிக்காவைப்போல இந்நாட்டு ஜனத்தொகையில் 3% பேர்தான் விவசாயத்தில் ஈடுபட வேண்டும். மேலும் இந்நாடு நகர் மையமான நாடாக மாற வேண்டும். |
| 43. | நீதிமன்றங்களில் நிறைய வழக்குகள் தேங்கி இருக்கின்றன. மேலும் வழக்காடுவதும் மிகுந்த செலவை உண்டுபண்ணுகின்ற காரியமாகிறது. | இப்படி, தேங்கி நிற்கும் வழக்குகளைப் பரிசீலனை செய்ய நிறைய விரைவு நீதிமன்றங்கள் வரவேண்டும். இப்படிச் செய்தால் நீதிமன்றங்களின்மூலம் உரிய நேரத்தில் நியாயம் கிடைக்க வாய்ப்புள்ளது. |

| | | |
|---|---|---|
| 44. | மின்வெட்டுஎன்பது அடிக்கடி நிகழக்கூடிய ஒரு பிரச்சினையாக உள்ளது. | இப்படி மின்வெட்டைக் கொண்டுவர அவசியம் இல்லாத அளவிற்கு மின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். |
| 45. | சாலை பராமரிப்பு மிகவும் குறைவாக உள்ளது. மழைநீர், வடிகால் வசதியும் திருப்தி இல்லாமல் இருக்கிறது. | சாலைகள் குண்டும் குழியுமாக இல்லாமல் தரமாக அமைய வேண்டும். மேலும் மழைக்காலத்தில் மழைநீர் தேங்காத அளவிற்கு வடிகால் வசதிகள் இருக்க வேண்டும். |
| 46. | மனை விலை மற்றும் அடுக்கு மாடிக் கட்டிடங்கள் விலை எல்லாம் மிகவும் அதிகரித்துவிட்டது. | சமூகத்திலுள்ள எல்லாப் பிரிவினருக்கும் சுலபமாகக் குடியிருக்கும்வசதி அமைய வேண்டும். |
| 47. | செல்வர்களும், அதிகாரத்தில் இருப்பவர்களும் நீதிமன்றங்களின் தண்டனைக்கு உட்படாமல் தப்பித்துக் கொள்கின்றனர். | செல்வர்களும், அதிகாரத்தில் உள்ளவர்களும் தவறு செய்திருந்தால் அவர்களையும் தண்டிக்கும் அளவிற்கு சட்டத்தின்கை வலுப்பெற வேண்டும். |
| 48. | ஐக்கிய நாட்டுச் சபையின் பாதுகாப்புக் குழுவில் இந்தியா உறுப்பினர் இல்லை. | இந்நிலைமாறி இந்தியா உறுப்பினராக வேண்டும். பாதுகாப்புக் குழு எடுக்கும் தீர்மானங்களில் இந்தியாவின் சம்மதமும் இருக்க வேண்டும். |
| 49. | இருசக்கர வாகனங்களும், கார்களும் சாலையில் மிகுந்த நெரிசலை உண்டு பண்ணுகிறது. | நகரங்களில் நெரிசலைத் தவிர்க்க மக்கள் இரயில் மற்றும் பேருந்துகளில் பயணம் செய்ய வேண்டும். |
| 50. | இந்தியர்கள் வெளிநாட்டவருடன் உறவாடும் பொழுது தாழ்வு மனப்பான்மையின் காரணமாக தாழ்ந்தவர்களாக நடந்து கொள்கிறார்கள். | இதற்கு மாறாக இந்தியர்கள் நம் நாட்டின் ஆன்மீக மற்றும் கலாச்சாரப் பெருமைகளை நினைத்துப் பெருமைப்பட்டு, கம்பீரமாக நடந்து கொள்ள வேண்டும். |

❀ ❀ ❀





## P.116

## Canto 3 The Glory and Fall of Life

### வாழ்வின் பெருமையும் சிறுமையும்

**An uneven broad ascent now lured his feet**

**பரந்த ஏற்றம் பதமற்ற நிலை அவனையழைத்தது**

- ☆ மனமெனும் பெட்டகத்தின் எல்லையைக் கடந்தான்
- ☆ விரிந்த இருளின் இழந்த உரிமையின் வாயில்
- ☆ மாற்றமும், ஐயமும் மலிந்து நிற்கும் மடம்
- ☆ ஓய்வற்ற உழைப்பு, அயராத ஆராய்ச்சியான உலகம்
- ☆ அறிவைக் கடந்தவன் அழகு நிறை முகம்
- ☆ எழுவது கேள்வி, பெறுவது ஏதுமில்லை
- ☆ தீராத பிரச்சினை தீர்க்க முடியாத ஒன்றாகிக் கவர்கிறது
- ☆ தரையில் பதியும் கால் ஊன்றுவதை உணர முடியவில்லை
- ☆ நிலையற்ற இலட்சியம் நிலையான நட்சத்திரம்
- ☆ ஐயமே அன்பராகி நிறைந்த உலகினூடே உலவி
- ☆ ஆட்டம் கண்ட அஸ்திவாரத்தின் ஆடுகின்ற எல்லை
- ☆ தொட முடியாத எல்லை தொலைவில் தெரிகிறது
- ☆ அனுகிவரும் அனுபவம் அனுதினம் தருகிறது
- ☆ கானல் நீரென கரையும் எல்லை மறையும் பாங்கு
- ☆ நிலையற்ற வாழ்வை நிலையாக அளிக்கும் நிரந்தரம்
- ☆ எண்ணற்ற பாதைகள் முடியாமற் சேரும்

☆ அவனிதயம் நிறைவுபெற எதுவுமில்லை

☆ ஓட்டம் நிறை ஆட்டம் ஓய்வின்றி எழும்

☆ எந்த சாஸ்த்திரத்திற்கும் கட்டுப்படாத கணக்கு

☆ அலைபாயும் கடலும் சமுத்திரமும் வரிசையாய் வந்து நின்றன

☆ வீறுகொண்டெழுந்த ஆத்மாவின் பெருவெளி வீச்சு

☆ பிரம்மத்தின் அமைதியை சீண்டி எழுப்பியது

☆ அனந்தம் துடிக்கும் அதிதீவிரம் வேகம்

☆ அவள் நினைவின் போக்கை நின்று நிலைபெறச்செய்து

☆ நிலையான ரூபத்தை செயலற்றதாக்கும் போக்கு

☆ பழகிய பரம்பரை அரங்கத்தைக் கடந்து

☆ காலத்தினூடே கடுசாக நடக்கும் ஆதரவற்ற நிலை

☆ விதியாகத் தொடும் வெல்ல முடியாத நிலையும் அசைக்காத

☆ ஆபத்தை அன்றாட நிகழ்ச்சியாக ஏற்கும் அன்புள்ளம்

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

தமக்கு துரோகமிழைக்கும் சக்திகளை அழைத்து வேதனை தரும் வாழ்வை ஏற்படுத்தி, அதையே எதிர்கால உலகின் கருவாக அன்னை நியமித்தார்.

***யோகத்தை ஆதாயத்திற்காக ஏற்றால்***
***யோகம் துரோகத்தால் நிறைவேறும்.***



# அன்பு அமிர்தமாகி, அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

☆ **(Intra-conscient) - அகச்சூழல், நம் கரணங்களிடையே உள்ள சூழல்.**

❖ ஆன்தொனி டிராலப் கதையொன்றில் Mr.டேல் என்பவர் தம் அண்ணி, அவர் பெண்களிடம் மிகப் பொறுப்பாகவும் பிரியமாகவுமிருக்கிறார். அவர் அண்ணன் இறந்துவிட்டார். இவர்கள் அவர் ஆதரவில் வாழ்கிறார்கள். ஆனால் அவர் குரலில் மென்மையில்லை.

மனம், உடல்போன்ற இரண்டு பகுதிகளை இணைக்குமிடம் அகச்சூழல் (intra-conscient). இது பிரம்மாண்டமானது. நமக்குக் கட்டுப்படாதது. நாமறியாதது. ஏன் அப்படிப் பேசினேன்என எனக்குத் தெரியவில்லைஎன்பது இங்கிருந்து எழுவது. மனம் - உணர்ச்சி; உணர்ச்சி - உடல்; ஆத்மா - மனம் ஆகிய இடங்கள் இதற்குரியது.

யூனிவர்சிட்டியில் ஒரு பையன் பெண்கள் பெஞ்சிற்குப் பின்னால் உட்கார்ந்திருந்தவன் எட்டி இடுப்பைத் தொட்டுவிட்டான். அவள் வீல்எனக் கதறினாள். வகுப்பு பீதியுற்றுக் கலைந்தது.
தூக்கலான ரவிக்கை வந்த புதிது.
“ஏன் தொட்டேன்என நானறியேன்” என்றான்.
இது intra-conscientன் செயல்.
மனிதன் இதுபோன்ற விலங்காக இருக்கும்பொழுது நாம் காணும் பண்பு (culture) நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

**ஆபத்தில்லை, கேட்கமாட்டார்கள்என்றால் கஜானாவைத்**

**திறந்து கொள்ளையடிக்கத் தயங்குவதில்லை.**

அன்று பெரிய தலைவர்களாக இருந்தவர் பேரன்கள் இன்று அடிக்கும் கொள்ளை நம்ப முடியவில்லை.
தமிழ்நாட்டில் பெரிய தியாகியின் பேரன் நாத்திகப் பிரசாரகராக இருக்கிறான்.
தரிசனத்தில் என்னைப் பார்த்து, ''என்ன விசேஷம் இங்கு?'' எனக் கேட்டான்.
"Mother பால்கனியில் வருவார்கள், வேடிக்கை பார்க்க வந்திருக்கிறார்கள்'' என்றேன்.
வேடிக்கையில்லை, 'தரிசனம்' என என்னைத் திருத்தினான்.
தியாகியின் பேரன் நாத்திகம் பேசுகிறான்.
அவனுக்கு உள்ளிருந்து 'தரிசனம்' என்ற சொல் எழுகிறது.
இவை இரு பகுதி - மனம், உடல் - இடையேயுள்ள புதைந்துள்ள பொக்கிஷம்.
இவை (negative) வேண்டாதவை.
அவை வேண்டியதானால் (positive) தாழ்த்தப்பட்டவன் ஜனாதிபதி ஆவான்.
நம்மை உள்ளே நாமறிய வேண்டும்.
**நல்லதிற்குப் பெருமைப்படுவதும், கெட்டதற்கு வெட்கப்படுவதும் எரிச்சல்படுவதாகும் (reaction).**
அன்னை தருவது உலகம், உலகம் முழுவதும்.
நாம் கேட்பது சிறிய பிரார்த்தனை.
நமக்குக் கேட்கத் தெரியாது.

ராஜா ஒருவனை பட்டம் கட்ட அழைத்தார்.
தானே தருவதற்குப் பதிலாக, "என்ன வேண்டும்?'' எனக் கேட்டார்.
''அரையணா வேணும்'' என்றான்.
கேட்பதைவிட அதிகமாகக் கொடுக்கக் கூடாதுஎன்று அரை அணா (3 நயா பைசா) கொடுத்தனுப்பினார். இது ரமண மகரிஷி கதை.
இதுபோன்ற கதைகள் உள்ள புத்தகம் எளிமையாக இருக்கும். எவரும் படிக்கலாம்.
ஸ்ரீ அரவிந்தம்என 1000 கதை எழுதலாம் - பிரபலமாக இருக்கும்.
உள்ளம் பெரியதானால், உலகம் அதனுள் எழும்.



☆ **ஹார்டிங் என்ற வார்டன் நல்ல குணம் பலஹீனம்.**
**Warden, Harding's goodness is a weakness.**

❖ ஹார்டிங்என்பவர் தெய்வ பக்தி, இனிமை, நேர்மைக்கு எடுத்துக்காட்டான ஆங்கிலப் பாதிரியார். 70 வயது. அவரை எட்டு அனாதைகள் உள்ள தர்மசாலைக்கு வார்டனாக நியமித்து மாதம் 1000/- ரூபாய் (150 வருஷத்திற்கு முன்) கொடுத்தார்கள். இந்த அனாதைகளுக்கு தினசரி அலவன்ஸ் 1¼ ரூபாய். அன்று இது இந்தியாவில் ஒரு குமாஸ்தா மாத சம்பளம் (ரூ.40/-). ஹார்டிங் ஊர் முழுவதும் நல்லவர்எனப் பெயரெடுத்தவர். அவர் மகளை Mr.போல்ட் திருமணம் செய்ய நிச்சயித்துள்ளார். போல்ட் பணக்கார டாக்டர். அவருக்குப் பொதுச் சேவை செய்ய ஆவல் ஏற்பட்டு இந்த அனாதை ஆசிரமத்தை ஆராய்ச்சி செய்கிறார். அனாதைக்கு 40 ரூ. தரும்பொழுது வார்டனுக்கு 1000/- ரூபாய் தருவது அநியாயம்எனத் தோன்றுகிறது. வார்டன் தாம் மணக்க இருக்கும் பெண்ணின் தகப்பனார். இதில் ஹார்டிங் தவறு எதுவுமில்லை. சம்பளம், அலவன்ஸ் டிரஸ்டிலிருந்து வருகிறது. இலட்சியம் கண்ணை மறைத்தது. ஹார்டிங் மீது கேஸ் போட்டார். போட்டவர் நல்லவர். இதனால் ஹார்டிங் மனம் புண்படுவார்என அவரால் நினைக்க முடியவில்லை. ஹார்டிங் நொந்துபோய் ராஜினாமா செய்கிறார். பெண் போல்டை மணக்க மறுக்கிறாள். கேஸை வாபஸ் செய்து பெண்ணை மணக்கிறார். ஹார்டிங் வேலை போனது போனதுதான். டாக்டருக்கு என்ன தவறுஎனப் புரியவில்லை. திருமணம்

செய்தவர் ஓர் ஆண்டில் இறந்துவிட்டார். அறிவில்லாமல் இலட்சியத்தின் பெயரால் நல்ல மனிதர் மனத்தைப் புண்படுத்துவது கொலைக்கொப்பாகும். இதுவே அவர் மரணத்திற்குக் காரணம். இது பிரபல ஆங்கில நாவல். **நல்லவர்கள் அறிவில்லாமல் நல்லவரைத் தொந்திரவு செய்வது**. இதனால் இக்கதை பிரபலமாயிற்று.

சத்தியம் ஞானம் பெறுவது நல்ல குணம்.
சத்தியமோ, ஞானமோ குறைவாக இருந்தால் Goodness - நன்மை - பூரணமாக இருக்காது.
தெம்பில்லாதவனுடைய நல்ல குணம், நல்ல குணமில்லை.
அது அவனுக்கும் பிறருக்கும் தொந்திரவு தரும்.
பல வகையான நல்ல குணங்களை ஆராய்வோம்.
எந்த குணம் இருப்பதாலும் அடுத்தது ஒன்று இருக்க வேண்டும்என்ற அவசியமில்லையென பகவான் கூறுகிறார்.

படித்தவன் தவறு செய்யமாட்டான்.
பெரிய மனிதன் நேர்மையாக இருப்பான்.
தலைவர் நியாயம் பேசுவார்.
ஜட்ஜ் நியாயம் வழங்குவார்.
வக்கீல் நம் கேஸை ஜெயிக்க முனைவார்என்று நாம் நினைப்பது சரியில்லை.
படிப்பால் அறிவு வரும், குணம் வாராது.
பெரிய மனிதனுக்கு அதிகாரம் உண்டு. அது நேர்மையாக இருக்கும் அவசியமில்லை என்பனபோன்ற அடிப்படை உண்மையை இக்கதை எடுத்துக் கூறுவதால் இது பிரபலமாயிற்று.

- குணம் பல வகையின. எது இருந்தால் அடுத்தது இருக்கும் என அறுதியிட்டுக் கூற முடியாது. எந்த இரு குணங்களும் ஒருவரிடமிருக்கலாம். பொறுமை, கருமித்தனம்; அறிவு, அவசரம் கலந்து வரும்.
- பொதுவாக, சில குணங்கள் சேர்ந்து காணப்படுகின்றன. Eg. அறிவு, திறமை. அது தற்செயலானது.
- நாம் படித்தவன் நியாயமாக இருப்பான். பணக்காரன் நல்லவனாக இருப்பான்என சில combinationகளை இயல்பாக எதிர்பார்ப்பது தவறுஎன்பது தத்துவம்.
- உதாரணமாக, சுத்தம், நியாயம் சேர்ந்திருக்கலாம் என நினைப்போம். இருக்க வேண்டும்என்ற அவசியமில்லை. **வாழ்வில் இது ஒரு முக்கியமான விஷயம். இங்கு தவறு செய்யாதவர் குறைவு**.

அனுபவமுள்ளவர்க்கு, சட்டம் தெரியாது.

தமிழ்ப் பண்டிதர் எழுத்துப் பிழையுடன் எழுதுகிறார்.

கந்தர்வப் பெண்கட்கு கற்பு தேவையில்லை.

தர்மபுத்திரருக்கு common sense இருக்காது.

Vice-Chancellorக்கு University rules தெரியவில்லை.

50 கோடி செலவான இடத்தில் 500 கோடி திருடியதாக professors பேசுவர்.

மகாத்மா காந்தி வன்முறையை violence கையாள்வார் என நாம் நம்ப முடிவதில்லை. 1946இல் நாட்டில் வன்முறை பரவலாக எழுந்தபொழுது மகாத்மா இந்த உண்மையை உணர்ந்து அதன் காரணம் தாமே எனக் கூறினார்.

வாய்ப்பைக் கொடுத்த தெய்வம் பெற உதவும்எனத் தெரியாதது.

பேப்பர் கம்பனிக்கு ஓர் இளைஞர் மானேஜர் வேலைக்கு வந்தார். இனிமையானவர். நல்லவர். அழகாக இருப்பார். இவர் குடும்பம் இராமலிங்க சுவாமிகள் குடும்பத்திற்கு உறவானது. வசதியான குடும்பம். இவர் கல்லூரியில் படிக்கும்பொழுது இவருடைய ஆசிரியர் மனைவிக்கு இளம்பிள்ளை

வாதம் வந்து ஊனமானார். ஆசிரியர் இளைஞர். மனைவிமீது அன்புள்ளவர். தம் நேரம் முழுவதும் மனைவிக்குப் பணிவிடை செய்வதில் கழித்தார். அத்துடன்,

> **ஓர் இலட்சியத்தை உருவாக்கி மாணவரிடம் கூற ஆரம்பித்தார். அது,** “**இளைஞர்கள் ஊனமுற்ற பெண்ணை மணந்து அவளுக்கு வாழ்நாள் முழுவதும் பணிவிடை செய்வது**”.

பேப்பர் கம்பனி மானேஜருக்கு இந்த இலட்சியம் மனதில் பதிந்துவிட்டது. தம் வீட்டாரிடம் கூறி ஊனமுற்ற பெண்ணை தனக்குப் பார்க்கச் சொன்னார். அவர்கள் மனக்கிலேசமடைந்தனர். இளம் வயது. அனுபவமில்லை. அறிவுமில்லை. அர்த்தமற்ற இலட்சியத்தை அடாவடியாக ஏற்று வீட்டாருக்குக் கவலையுண்டு பண்ணினார். **எண்ணம் உயர்ந்தது. மிக அழகான பெண் வந்தது. பார்த்ததும் அவருக்குப் பிடித்துவிட்டது. திருமணமாயிற்று**. வாய் எதைப் பேசினாலும், முடிவில் காரியம் மனம் போலவே நடக்கும் என்பதை இந்த நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது.

அழகும் அறிவும் சேர்ந்திருக்கும்.

திறமையும் நேர்மையும் சேர்ந்திருக்கும்.

ஆங்கிலத்தை நாடு முழுவதும் எதிர்த்த அரசியல் தலைவர்கள் பிள்ளைகளை ஆங்கிலப் பள்ளி (English school)யில் சேர்க்கின்றனர்.

ஹார்டிங் எந்தத் தவறும் செய்யாமல் வேலையை இழக்கிறார். இது நியாயமா? இரு வருஷங்கட்குப் பின் இவருக்கு (Dean) டீன் வேலை £1200 வருகிறது. போனது £800, வந்தது £1200. இவர் எளியவர். இவர் பேத்தியை, பெரும்பிரபு £100,000 வருமான-முள்ளவர் திருமணம் செய்துகொள்கிறார். பார்வைக்கு



அதர்மமாகத் தெரிவதின்பின் வாழ்க்கை தர்மமிருப்பதை, கதை எடுத்துக் காட்டுகிறது. அதுவே அதன் பிரபலத்திற்குக் காரணம்.

- ❇ ஹார்டிங் வரலாறு, அவர் இராஜினாமா, Dean வேலை வந்தது, அதை மறுத்தது, பேத்தியை Lord கட்டிக்கொண்டது ஆகியவை பல விஷயங்களைத் தெளிவுபடுத்தும். இதுபோன்ற நிகழ்ச்சிகளை இலக்கியத்தில் காணலாம்.
- ❇ அன்னையிடம் இவ்விதிகள் செயல்படும் வழியும், விதிவிலக்காக நடப்பதும் நாம் அன்னையை அறிய உதவும்.
- ❇ **வாழ்வில் எந்த நுணுக்கமும், அது அன்னையிடம் மாறுவதும், மாற மறுப்பதும் அன்னையை அறிய உதவும்**.
    - ➻ இது நாம் நம்மை ஆழ்ந்து அறிய உதவும்.
    - ➻ இது உலகில் பொதுவாகக் காண முடியாத அறிவு.

☆ **கொடுத்தீங்க, இல்லேன்னு சொல்லலை, எனக்குப் புண்ணியப்படவில்லை.**

இந்தக் குரல் கேட்டபின் அவர்களுடன் பழகக் கூடாது.

அது தவறு, பாவம்.

❖ பிறருக்கு உதவி செய்வது நமக்கெல்லாம் வாழ்வின் இலட்சியம்.

உடன்பிறந்தவர், பெற்றோர், பிள்ளைகட்குச் செய்வது உதவியில்லை, கடமை.

❇ *இது பெரிய இலட்சியம். இதைவிடப் பெரிய இலட்சிய-மில்லை.*

❊ *செய்பவர் இலட்சியமாக எடுத்துக்கொண்டால், பெறுபவர் சௌகரியமாக நினைப்பார். அவ்வழி இலட்சியம் பாவமாக மாறும். குறைந்தபட்சம் அறிவீனமாகும்.*

❊ ஸ்ரீ அரவிந்தர் மட்டுமே இந்தப் புதிருக்கு விடை அளித்துள்ளார். அது ஞான பொக்கிஷம்.

மனித உறவு இனிமையாகக் கடமையில் ஆரம்பித்து கடுமையான கொடுமையில் முடியும். இவை இரு துருவங்கள். எல்லையில் நிறுத்தினால் தவறில்லை. நிறுத்தாவிட்டால் கொடுப்பவர் பெறுபவர் நிலைக்குத் தவறாது வருவார். அந்த நேரம்,

❊ பெறுபவர், "அவர்கள் நடுத்தெருவில் நிற்க வேண்டும்; நான் கைதட்டிச் சிரிக்க வேண்டும்" எனச் சொல்லத் தவறியதேயில்லை. இந்த எண்ணம் உள்ளேயிருப்பதை ஏற்பது sincerity, மறுப்பது *முழுப்பொய்.* "இந்தக் குளத்தில் சேறு இல்லை" எனச் சொல்வது போலிருக்கும்.

❊ நம் sincerityயைச் சோதனை செய்ய பல வழிகளில் இது ஒன்று.

❊ மற்றவை,

- எவரிடம் நம் குறையைச் சொன்னோமோ அவர் எதிரியாவார்.
- நம்மால் நஷ்டமடைந்தவரை அளவுகடந்து கேலி செய்வது.
- உதவி செய்தவரை அழிக்க ஆழ்ந்து விரும்புவது.
- சந்தர்ப்பம் கிடைத்தால் தவறாது தப்பு செய்வது.
- பிறரை மட்டம் தட்ட மனம் ஆர்வமாக எழுவது.
- பொறாமைப்படுவது.

*We invite as guests to our house our enemies - 'Savitri'.*



*எதிரிகளை நம் வீட்டிற்கு விருந்தாக அழைக்கிறோம் - சாவித்திரி*

நாட்டில் செல்வாக்கிழந்த கட்சி. அதன் தலைவருக்கு வருமானமில்லை. அன்பருக்கு நெருங்கிய நண்பர். இவருக்கு 60 வருகிறது. கொண்டாட வசதியில்லை. 10 அல்லது 15 உறவினர்கள் வெளியூரிலிருந்து வந்தனர். உள்ளூரில் எவரும் இவரை வீட்டிற்கு வந்து வாழ்த்து கூறவில்லை. 60 நிறைய 1 வாரம் முன்பு இவருக்கும் இவர் மனைவிக்கும் பட்டு வேஷ்டி, பட்டுப் புடவை எடுத்துத் தர அன்பர் முடிவு செய்தார். அரை மணி நேரத்தில் தலைவர் வந்தார். காரணமில்லாமல் திட்டினார். அன்பருக்கு தம் தவறான முடிவு புரிந்து மனதை மாற்றிக் கொண்டார்.

இந்த அனுபவத்திற்குப் பிறகும் அன்பருக்குத் தலைவர் மீது பிரியம். அது 1969 ஆம் வருஷம். தலைவர் 50 ரூபாயில் குடும்பம் நடத்துகிறார். அவருக்கு ரூ.500/- இனாம் கொடுத்தார் அன்பர். தலைவர் பெற்றுக்கொண்டு கேலியாக, குத்தலாக, "உங்கள் பார்ட்னரிடம் என் நன்றியைக் கூறுங்கள்" என்றார். அன்பர் கம்பனி பணத்தை எடுத்து தானம் செய்வதாகச் சொல்கிறார். அது பொய். பணம் அன்பருடையது. அதுவே அன்பர் கொடுத்த கடைசி உதவி.

"எனக்குச் செய்ய உனக்கு அதிர்ஷ்டமில்லை" என்பது அதுபோன்ற சொல்.

பிறர் பாவத்தை ஏற்று நாம் நஷ்டப்பட்டால் நம்மை கேலி செய்வர்.

(பணக்காரப் பெண் திவாலைக் காப்பாற்றியவளை ஓரகத்திகள் கேலி செய்வது). பெரிய குடும்பம். திவாலுக்கு வந்துவிட்டது. அது வெளியில் தெரியுமுன் அடுத்த மாவட்டத்தில் பெரிய இடத்து சம்பந்தம் செய்துவிட்டனர். பெண் வீட்டிற்கு வந்தாள். சிறிது நாள் கழித்து அமீனா

வந்தான். 4 ஓரகத்திகள் உள்ள வீடு. புதிதாக வந்த பெண் தன் நகைகளையெல்லாம் கொடுத்து, மேலும் தகப்பனாரை உதவச் சொல்லி திவாலைத் தவிர்த்தாள். சில மாதம் கழித்து ஒரு பெரிய இடத்துக் கல்யாணம் வந்தது. எல்லா ஓரகத்திகளும் எல்லா நகைகளும் போட்டிருந்தனர். தியாகம் செய்தவளிடம் நகையில்லை. அவளை அனைவரும் கேலி செய்தனர். இதுவே யதார்த்தம். எவரும் தம் நகையைக் கடன்தர முன் வரவில்லை.

கூலிக்காரன், பிச்சைக்காரன் புத்திசாலியானால் இப்படிப் பேசுவான். எல்லாப் பூசாரிகளும் இப்படிமட்டும் பேசுவான். இதைப் பேசாத பூசாரி தெய்வம்.

இந்த மனிதர்கள் நாகரீகமடைய 1000 ஆண்டுகளாகும்.

☆ **'இதற்கு வழியில்லை என்பது இங்கில்லை'.**

**This is an absolute *TRUTH*.** விலக்கில்லாத விதி.

அன்னை தவிர வேறெவரும் இதைக் கூறவில்லை, கூற முடியாது.

*மனிதன் பிரம்மம். அதனால்* infinite. *குதர்க்கமாகி மாறினால் இதையும் மீறிவிடுவான்* - தான் பெறுவதைவிட இந்தச் சட்டம் பொய்என நிரூபிக்க மனம் விழையும். எவரிடமும், எல்லையைத் தாண்டினால், இந்தக் குரல் கேட்கும்.

❖ என் நண்பர் ஒருவர் இங்குதான் ஆரம்பிப்பார்.

❖ நமது உண்மை (sincerity)யைச் சோதனை செய்யும் சட்டம் இது.

❖ இக்குரல் அழிந்து திருவுருமாறினால் (transform) யோகம் பிறக்கும்.

❖ இந்தியாவில் அறிவு வளர்ந்த இடம் தமிழ்நாடு. அதை மிஞ்சியது கேரளா.



❖ அறிவு அகந்தைமூலம் வருவது குதர்க்கம்.

❖ அறியாமை அகந்தைமூலம் வருவது பெரிய குதர்க்கம். ஈடு இணையில்லாதது - தன்னைத் தானே கேலிக்கூத்தாக்குவதை அறியாத மடமை. இப்படிப்பட்டவர் யாராவது அகப்படமாட்டார்களாஎனக் காத்திருப்பார்கள். பொறி (trap) வைத்துப் பிடித்து சுரண்டியபின் "என்னால் நீ பிழைக்கிறாய்" என்பார்கள்.

❖ Man's resourcefulness to raise his status is infinite. தன்னை உயர்வாகப் பேசுவதில் மனிதனுக்கு அவனே நிகர் - பிச்சைக்காரனும் ''எனக்குப் போட நீ கொடுத்து வைத்திருக்க வேண்டும்'' என்பான்.

மனிதனிடம் என்ன எதிர்பார்க்கிறீர்கள்என அன்னையைக் கேட்டதற்கு எதுவுமில்லை என்றார்.

உங்களை என்ன கேட்கலாம் என்றதற்கு எதுவும் கேட்கலாம் என்றார்.

இந்த யோகத்திற்குரிய சட்டங்கள் இவை.

*எளிய மனிதனுக்கு இவை தேவையில்லை. தெரிவது உதவும்.*

❖ *நாம் சோதனை செய்ய இந்தச் சட்டம் உதவும். முடியாது என்பது எதுவானாலும் முடியும்எனச் சோதித்தறியலாம்.*

❖ *சோதனை ஒரு முறைக்குமேல் செய்யக்கூடாது.*

*ஆங்கில நாவல்களில் (English novels) மனிதத் தன்மை, சுயமரியாதை, மெய் பேசுவது (Self-respect, truth speaking) 95% வரும். நம் வாழ்வில் 5%உம் இல்லாதது. ஒரு குடும்பம் இவற்றை 100% பெற முயன்றால் இச்சட்டம் நிறைவேற்றித் தரும் (At least two persons can try).*

இருவர் இணைந்து முயலலாம். இதுவரை எனக்கு இரண்டாம் நபர் கிடைக்கவில்லை.

*தொடரும்....*

❀ ❀ ❀

# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XX. Death, Desire, and Incapacity

Page No.191
Para No.5

Life is Power.
The individual life grows.
It means growth of individual life.
It is a divided individual life.
It wants to master its world.
The force really prevents it.
It means something.
It is to be master of the All-Force.
This consciousness is individual and divided.
Its power is divided, individual.
Therefore it is limited.
Its will to be master of the All-Force too is limited; only the All-Will can be that.
The individual will can do so by becoming one again with the All-Force and All-Will.
The individual life is in the individual form.
It is always subject to the three badges.
They are *Death, Desire, Incapacity*.



## 20. மரணம், ஆசை, இயலாமை

வாழ்வு பவர்.
தனி நபர் வாழ்வு வளர்கிறது.
அதன் மூலம் தனி நபர் வாழ்வு வளர்கிறது.
தனி நபர் வாழ்வு முழுமையானதன்று.
தன் உலகையாள அது முயல்கிறது.
பிரிந்த சக்தி அதற்குத் தடையாகிறது.
அதற்கு அர்த்தமுண்டு.
எல்லா சக்திகட்கும் தலைவனாவதாகும்.
இந்த ஜீவியம் தனி நபர் ஜீவியம், பிரிவினைக்குட்பட்டது.
அதன் சக்தி தனி நபருடையது, முழுமையற்றது.
பிரிந்ததால், சக்தி அளவுக்குட்பட்டது.
அனைத்து சக்திகளையும் ஆள்வதும் அளவுக்குட்பட்டது. அனைத்தின் உறுதியே அதைச் செய்ய முடியும்.
தனி நபர் உறுதி அனைத்துடன் சேர்ந்தால் அதைச் செய்யலாம்.

தனி நபர் வாழ்வு தனி நபர் ரூபத்திலுள்ளது.
அதற்கு எப்பொழுதும் மூன்று விலாசம் உண்டு.
அவை மரணம், ஆசை, இயலாமை.

Page No.192
Para No.6

Death is imposed on the individual life.
Its own condition of existence permits it.
It has a relation to the All-Force.
It manifests in the universe.
Its relation with the All-Force imposes it.
The individual life is a particular play of energy.
It is specialised.
It is to constitute, maintain and energise.
Finally it is to dissolve.
It does so when its utility is over.
It is one of the myriad forms.
All of which serve.
Each is in its own place.
Each in its time and scope.
All serve the whole play of the universe.
There is energy of life in the body.
There is energy in the external.
It attacks the former.
It comes from the universe.
It has to draw them in and feed upon them.
It is itself being constantly devoured by them.
All Matter according to the Upanishad is food.
*"The eater eating is himself eaten."*
The life is organised in the body.
It is constantly exposed.
It is to the possibility of being broken up.
It is by the attack of the external forces.
Its devouring capacity is insufficient.
Or, it is not properly served.
Or, it does not have a balance it needs.



மனித வாழ்வை மரணத்திற்கு உட்படுத்துகிறார்கள்.
அதன் நிலையே அதை அனுமதிக்கிறது.
அனைத்து சக்தியுடன் அதற்குத் தொடர்புண்டு.
அது பிரபஞ்சத்தில் வெளிப்படுகிறது.
அனைத்து சக்தியுடன் உள்ள தொடர்பும் அதற்காதரவு.
தனிநபர் வாழ்வு சக்தியின் குறிப்பிட்ட செயல்.
அதன் செயல் குறிப்பானது.
உருவாக்கி, காப்பாற்றி, சக்தியால் நிரப்புவது அதன் வேலை.
முடிவாக அது கரைய வேண்டும்.
அதன் வேலை முடிந்தவுடன் அது கரைகிறது.
கோடிக்கணக்கான ரூபங்களில் அது ஒன்று.
அனைத்தும் சேவை செய்கின்றன.
ஒவ்வொரு ரூபமும் அதற்குரிய வேலையைச் செய்கின்றன.
ஒவ்வொன்றிற்கும் உரிய காலம், அளவுண்டு.
அனைத்தும் பிரபஞ்ச லீலையை சேவைக்காக ஏற்கின்றன.
உடலின் உயிரில் சக்தியுள்ளது.
புறத்தில் சக்தியுள்ளது.
உடலின் சக்தியை புறத்தின் சக்தி தாக்குகிறது.
தாக்குதல் பிரபஞ்சத்தினின்று எழுகிறது.
அது அவற்றை ஏற்று அதன் வழி வளர வேண்டும்.
புறத்தால் அகம் முழுமையாக விழுங்கப்படுகிறது.
ஜடம் *அன்னம்* என உபநிஷதம் கூறுகிறது.
*“விழுங்குபவன் விழுங்குவதால் விழுங்கப்படுகிறான்.”*
உடலில் வாழ்வு அமைந்து செயல்படுகிறது.
அது எப்பொழுதும் தாக்கப்படலாம்.
எந்த நேரமும் அது உடைக்கப்படலாம்.
தாக்குதல் புறத்தினின்று எழும்.
அதன் விழுங்கும் திறன் போதாது.
அல்லது அதன் திறமைக்குப் போதுமான ஆதரவில்லை.
அல்லது, தேவையான சமநிலையில்லாமலிருக்கலாம்.

The balance is between a capacity as well as necessity.
The capacity is one of devouring.
The necessity is one of providing food.
The food is for the life outside.
It is unable to protect itself.
It is devoured.
It is unable to renew itself.
Therefore it is wasted away and broken.
There must be a renewal.
It must be newly constructed.
For that it must pass through the process of death.

Not only so. Page No.192
Let us see the language of the Upanishad. Para No.7
The life-force is the food of the body.
The body is the food of the life-force.
In other words.
The life-energy in us does two functions.
It supplies the material.
The body is built by this material.
It constantly maintains and renews it.
At the same time it is constantly using up the substantial form.
It is a form of itself.
It thus creates.
It keeps it in existence.
The balance between the two operations may become imperfect.
Or disturbed or the ordered play of the different currents of life-force is thrown out of gear.
Then disease and decay can intervene.
It commences the process of disintegration.



ஒரு திறமையும், அவசியமும் சமமாக இருக்க வேண்டும்.
திறமையென்பது விழுங்கும் திறமை.
உணவு சப்ளை செய்வது தேவை.
புற வாழ்விற்கு உணவு தேவை.
அது தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை.
அதை விழுங்கிவிடுகிறார்கள்.
தன்னை அதனால் புதுப்பிக்க முடியவில்லை.
அதனால் அது அமிழ்ந்து உடைகிறது.
அது புதுப்பிக்கப்பட வேண்டும்.
அல்லது புதியதாய் சிருஷ்டிக்கப்பட வேண்டும்.
அதற்கு அது மரணத்தின் வழி செல்ல வேண்டும்.

இது மட்டுமன்று.
உபநிஷதம் கூறுவதைக் கருதுவோம்.
வாழ்வின் சக்தி உடலின் உணவு.
உடல் வாழ்வின் சக்திக்கு உணவு.
வேறு வகையாகக் கூறலாம்.
வாழ்வின் சக்திக்கு இரு கடமைகளுண்டு.
தேவைப்படும் சரக்கை சப்ளை செய்கிறது.
ரூபம் உருவாகும் சரக்கு இது.
தொடர்ந்து அதை நிர்வாகம் செய்து புதுப்பிக்கிறது.
அதே சமயம் அதன் வலுவான ரூபத்தால் அதைப் பயன்படுத்துகிறது.
அந்த ரூபம் அதனுடையதே.
அப்படி அதைச் சிருஷ்டிக்கிறது.
அதை உயிருடன் வைக்கிறது.
இந்த இரு செயலிடையேயுள்ள சமநிலை சரியில்லாமலிருக்கலாம்.
அல்லது இவ்விரு நீரோட்டங்களில் ஒழுங்கு தடைப்படலாம்.

அப்பொழுது நோயும் அழிவும் எழும்.
மரணம் அப்படி ஆரம்பிக்கிறது.

There is a struggle for conscious mastery.
Mind is growing.
They together make the maintenance of the life more difficult.

Form is a reality.
It has an increasing demand on energy.
It is in excess of the original system of supply.
It disturbs the original balance of supply and demand.
A new balance can be established.
Before that many disorders are introduced.
They are inimical to harmony.
It is so to the length of maintenance of life.
There is something in addition.
It is the attempt at mastery.
It always creates a corresponding reaction.
It is full of forces.
They also desire fulfillment.
Therefore they are intolerant.
Existence seeks to master them.
They revolt against existence and attack it.
There too a balance is disturbed.
A more intense struggle is generated.
The mastering life is strong.
It cannot always resist and triumph.
For that it must be unlimited.
Or it should succeed in establishing a new harmony.
This harmony must be with its environment.

*Contd....*

❀ ❀ ❀



ஆள முயலும் போராட்டம் தெளிவாக நடக்கிறது.
மனம் வளர்கிறது.
இவையிரண்டும் சேர்ந்து வாழ்வை நிர்வாகம் செய்வதை
சிரமமாக்குகின்றன.
ரூபம் அவசியம்.
ரூபம் நிலைக்க மேலும் மேலும் சக்தி தேவைப்படுகிறது.
தேவை முதலில் செய்த ஏற்பாட்டைவிட அதிகமாக இருக்கிறது.
தேவைக்குரிய சப்ளைஎன்ற சமநிலை இதனால் பாதிக்கப்படுகிறது.
புதிய சமநிலையை ஏற்படுத்தலாம்.
அதைச் செய்யும்முன் பல தொந்தரவுகள் எழுகின்றன.
அவை சுமுகத்திற்கு எதிரானவை.
ஆயுளுக்கும் அவை எதிரானவை.
இத்துடன் வேறொன்றும் உண்டு.
வாழ்வை ஆள முயல்வது அது.
அதற்குரிய எதிர்ப்பு எழுகிறது.
அதனுள் ஏராளமான சக்திகள் உண்டு.
அவையும் பூரணத்தை நாடுகின்றன.
அதனால் அவற்றிற்கு பொறுக்க முடியவில்லை.
பிரபஞ்ச வாழ்வு அதனை ஆள முயல்கிறது.
அதனால் அவை எதிர்த்துப் போர்க்கோலம் பூண்டு தாக்குகின்றன.
இதுவும் சமநிலையை தொந்திரவு செய்யும்.
அதிதீவிரமான போராட்டம் எழுகிறது.
ஆள முயலும் வாழ்வு வலுவானது.
அதனால் எதிர்த்து எப்பொழுதும் வெற்றிகாண முடியாது.
வெற்றிபெற சக்தி அளவு கடந்திருக்க வேண்டும்.
அல்லது உயர்ந்த புதிய சுமுகத்தை அது ஏற்படுத்த வேண்டும்.
சூழலுடன் இந்த சுமுகம் ஏற்பட வேண்டும்.

*தொடரும்....*

❀ ❀ ❀

## இம்மாதச் செய்தி

**பிறர் கண் கொண்டு பார்ப்பது**

**பரநலம்.**



# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

161. *சாப்பிட்ட வயிறு வாழ்த்தும்.*
    - **அருள் பெற்ற ஆன்மா ஆழத்தில் உண்மையாக இருக்கும்.**

162. *கண் இமையைக் காப்பதுபோல்.*
    - **அன்னை அன்பரைப் பாதுகாப்பதுபோல்.**

163. *முன்ஏர் போனதுபோல் பின்ஏர் போகும்.*
    - **அன்பர் பாதை அவரவர்க்குரியது.**

164. *கேட்காமல் வாராது.*
    - **தானே வாராதது தமக்குரியதன்று.**

165. *தை பிறந்தால் வழி பிறக்கும்.*
    - **நினைவு எழுந்தால் நிகழ்ச்சி எழும்.**

*தொடரும்....*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஞானம் முழுமை பெற்று, கூர்மையானால் செயலை நிர்ணயிப்பது எதுஎனத் தெரியும். ஹாம்லெட், சிம்ப்போசியம் எப்படி எழுந்தனஎனத் தெரிந்தால் ஞானம் கூர்மை பெறும்.

***இலக்கியச் சிறப்பறியும் ஞானம்.***

# அன்பர் கடிதம்

*அன்னைக்கு சமர்ப்பணம்.*

அன்புள்ள தெய்வீக அன்னைக்கு வணக்கம். நான் என்னுடன் பணிபுரியும் நபர் ஒருவர் மூலம் அன்னை ஸ்ரீ அரவிந்தர் தியான மையத்திற்கு அவர் சொல்படி ஒரு முறை சென்று வந்தேன். பிறகு எனக்கு அன்னையின் அருள் வேண்டி பிரார்த்தனை செய்து சமர்ப்பணம் செய்ய ஆரம்பித்தேன். ஆரம்பித்த சிறிது காலத்தில் நான் வசிக்கும் இல்லம் என்னுடைய மாமாவின் உதவியால் புதுப்பிக்கச் செய்தார். பிறகு என் மகள் திருமணத்திற்காக பிரார்த்தனை செய்து சமர்ப்பணம் செய்தேன். அதுவும் சிறிது காலத்தில் அன்னையின் அருளால் நல்ல வரன் அமைந்து அதற்கு என்னுடைய நான்கு அக்கா, மாமாவின் உதவியால் வெகு சிறப்பாக நடைபெற அன்னை அருள்புரிந்தார்கள். பிறகு மன அமைதி வேண்டி பிரார்த்தனை செய்து சமர்ப்பணம் செய்கிறேன். அதுவும் கூடிய விரைவில் எனக்கு அருள்புரிவார்கள்என்ற நம்பிக்கையுடன் அன்னையின் அருள் கிடைக்கும்என பிரார்த்தனை செய்து சமர்ப்பணம் செய்கிறேன்.

அன்னைக்கு சமர்ப்பணம்.

நன்றி! நன்றி! நன்றி!

-- *S. முனுசாமி, காஞ்சிபுரம்*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒன்றை நாடினாலும், விழைந்தாலும் கழுத்தை நெறிக்கும் கைகளாகக் கடவுள் உன்னைத் தீண்டுகிறார்.

***விருப்பின் விளைவு.***



# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

## *The Life Divine* புரிவது.

*The Life Divine* என்பதை ஒரு நூல்என நாம் புரிந்து கொள்கிறோம். உண்மையில் இது ஒரு நூலன்று. ஆன்மீக தீட்சை தரும் எழுத்து. எந்த அத்தியாயத்தின் கருத்து ஒருவருக்கு விளங்கினாலும் அவருக்குப்

***பூரணயோக வாயில் திறந்ததுஎனப் பொருள்.***

நமது பரம்பரையில் பிரம்மத்தையடைய நாம் தவம் செய்கிறோம். அது மோட்சம் எனப்படும்.

*எதையறிந்தால் அனைத்தையும் அறிய முடியுமோ*
*அதற்கு பிரம்மம்எனப் பெயர்என்று ரிஷிகள் கூறினர்.*

*The Life Divine* பிரம்மத்தையே குறிக்கோளாக்கும் எழுத்தாகும். முன்னோர்கள் கூறிய பிரம்மம் அக்ஷரபிரம்மம். புருஷோத்தமன் எனப்படும். ஆதியும், அந்தமுமில்லாத, அசைவற்ற, மாற்றமற்ற, செயலற்ற மௌனத்தின் உறைவிடமானது அக்ஷர பிரம்மம். *The Life Divine* அக்ஷரபிரம்மம் முடிவன்று, அதற்கடுத்த கட்டம் உண்டுஎனக் கூறுகிறது. அதன் அம்சங்கள்,

- ✯ ஸ்ரீ அரவிந்தபிரம்மம் அக்ஷரபிரம்மத்தை உட்கொண்டது.
- ✯ இதற்கு ஆதியும், அந்தமுமில்லை, சுயமானது (Self-existent). ஆனால் இதற்கு அசைவு, செயல், மாற்றம் உண்டு.
- ✯ இதன் மௌனத்தைப் பகவான் மௌனத்தின் பின்னணியி-லுள்ள மௌனம் Silence behind Silence என்கிறார்.
- ✯ அக்ஷரபிரம்மம் சிருஷ்டிக்கவல்லதன்று.

ஸ்ரீ அரவிந்தபிரம்மம் சிருஷ்டித்தது, சத்தியஜீவியத்தின்மூலம் சிருஷ்டித்தது.

- ☆ இதன் சிருஷ்டியில் மரணம், மூப்பு, வலி, துக்கம், தீமையில்லை.
- ☆ இந்த யோகம் மனிதனை ஸ்ரீ அரவிந்தபிரம்மமாக உயர்த்தும். எந்த நேரமும் அதன் முன்னிலையில் அவனிருப்பான்.
- ☆ இதை மனம் புரிந்து கொள்ள முடியாது, சத்தியஜீவியமே புரிந்து கொள்ளும்.

  - ❖ நூல் எவரும் புரிந்து கொள்ளவில்லையென பகவானும், அன்னையும் கூறினர்.
  - ❖ தத்துவம் அறிந்தவர் நூலில் என்ன பகவான் கூறுகிறார் எனப் புரிந்து கொள்வர்.
  - ❖ உதாரணமாக முரண்பாடு உடன்பாடுளன்று பகவான் கூறுகிறார்என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

    அது புரிந்து கொள்வதாகாது.

    - ➻ உடன்பாடு சிருஷ்டியில் முரண்பாடாகத் தன்னை வெளிப்படுத்துகிறது.

      அதை உடன்பாடாக அறிய நம் மனம் உயர்ந்து சத்தியஜீவியமாக வேண்டும். அப்படிப்பட்ட மாற்றம் ஏற்பட நாம் கர்மத்தால் கட்டுண்ட பிரகிருதியின்று புருஷனுக்குப் போக வேண்டும்என்று புரிந்தால்

      ***புரியும் ஞானம் சித்தியாகி***
      ***நம்மை பிடித்த கர்மம் உடன் விலகும்.***

    - ➻ இதுவே *The Life Divine* புரிவதற்கு முதல் அத்தியாய உதாரணம். ஒவ்வோர் அத்தியாயத்திலும் அதுபோல் புரிய வேண்டியதுஎன ஒன்றுள்ளது. ஏதாவது ஓர் அத்தியாயத்தில் ஏதாவது ஒரு முக்கியக் கருத்து புரிந்துவிட்டால் அது

      ***பூரணயோக வாயில் திறந்ததாகும்.***



எல்லா அத்தியாயங்களிலும் எல்லாக் கருத்துகளும் புரிந்தால், அவை தாமே சித்தியாகும். அது முடிவான சித்தியான திரிகால திருஷ்டியாகும்.

*தொடரும்.....*

❀ ❀ ❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

பெரியதும் சிறியதும் ஆதியில் ஒன்றே என்றறிவது ஆன்மீகத் திருஷ்டி. நடைமுறையிலும் அவை ஒன்றே என்று பூரணயோகம் காண்கிறது.

***ஆதியில் ஒன்றானவை நடைமுறையிலும் ஒன்றே.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

புற நிகழ்ச்சியால் உடலைத் தீண்டும் இவ்வனுபவம் கழுத்தை நெறிக்கும் கைகளை இறைவன் ஸ்பர்சமாக அறியும்.

***ஸ்பர்சத்தின் இனிமை.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

கடைசி அத்தியாயங்களைப் புரிந்து கொள்ளும் திறனையும் நூலின் பல பகுதிகளில் பகவான் கொஞ்சம் கொஞ்சமாக அளிக்கிறார்.

***முதலிலேயே வரும் முடிவு.***

## சத்தியஜீவியம் என்பது ஜீவன் சுய ஞானம் சுய நிர்ணயமாகும் லோகத்தில் செயல்படுவது

பிரம்மம் தவிர வேறில்லை, சர்வம் பிரம்மம்என்ற ரிஷிகள் எப்படி பிரம்மம் உலகமாயிற்று, உலகை பிரம்மா எப்படி சிருஷ்டித்தார் எனத் தெரியவில்லை என்றனர். 1945இல் கல்லூரி சிப்பந்திகட்கு 5/- ரூ. சம்பளம். *அவனுக்குப்* பெருக்கும் வேலை. அவர்கள் யூனியன் அமைத்து அதிக சம்பளம் கேட்க விரும்பினர். கேட்டனர். கிடைக்கவில்லை. ஸ்டிரைக் செய்ய நினைத்தனர், தைரியமில்லை. இந்த வேலையும் போய்விட்டால் வயலில் வேலைக்குப் போக வேண்டும். அது 6 மாதம் வரையுண்டு. தினசரி 10 பைசா கூலி. தொழிலாளிகள் கூடினர். குழம்பினர். பல மாணவர்கள் பேசினர். முடிவு வரவில்லை. மாணவர் தலைவன் எழுந்தான். ‘‘உங்களுக்கெல்லாம் சொரணை-யில்லையா?’’ எனத் திட்ட ஆரம்பித்து 5 நிமிஷம் பேசினான். அனைவரும் கோஷமிட்டு ஸ்டிரைக் செய்ய முடிவு செய்தனர். மாணவத் தலைவனுக்கு என்ன பேசினோம், எப்படிப் பேசினோம் எனத் தெரியாது. ஆனால் காரியம் நடந்தது. பேச்சாளர் வாழ்வில், பாடகர், நடிகர் வாழ்வில், வீட்டில் நெருக்கடியான நேரம் வந்த பொழுது ஒருவர் ஆவேசமாகப் பேசி காரியம் முடிவதுண்டு. ***ஆவேசம் அவர் கருத்தைப் பிறர் செயலாக்குகிறது. ஆவேசம் அனைவரையும் ஐக்கியப்படுத்துகிறது***.

ரிஷிகள் சொல்லத் தவறியதை பகவான் விளக்க, ‘‘அகம், புறமாவதால், உலகம் சிருஷ்டிக்கப்பட்டது’’ என்கிறார். பிரம்மம் முழுமையானது. முழுமையான பிரம்மம் அகம், புறம்என்று பிரிவதால் அகம் ஆத்மாவாகவும், புறம் உலகமாகவுமாயிற்றுஎன்று பகவான் விளக்கமளிக்கிறார். அப்படிப் பிரியும் திறன் சத்தியஜீவியத்திற்-கிருப்பதால் சத்தியஜீவியம் சிருஷ்டிக்கிறது என்கிறார். *The Life Divine* என்ற நூலில் புரியாத இடங்களில் முக்கியமான இடம்



இது. அதன் முக்கியக் கருத்து மேலே கூறியது.

- ✮ முதலாளி போடும் உத்தரவைத் தொழிலாளி செயல்படுத்தும் பொழுது, எண்ணம் முதலாளியுடையது, செயல் தொழிலாளி-யுடையது.
- ✮ உடன் பிறந்தவர், நண்பர், தம்பதி, குரு-சிஷ்யன் உணர்வால் ஐக்கியப்படுவதுண்டு. அந்த நேரம் எழும் முக்கிய விஷயங்களில் ஒருவரையொருவர் கலந்து ஆலோசிக்க வசதியில்லாதபொழுது ஒருவர் மற்றவர் எண்ணத்தை அப்படியே பிரதிபலிப்பதுண்டு. ‘‘நான் நினைத்ததை நீங்கள் பேசிவிட்டீர்கள். நானே பேசியிருந்தால் இதையே சொல்லியிருப்பேன்’’ என்பார்.

***உணர்வின் ஐக்கியம் செயலாவது வாழ்வில் உண்டு.***

- ✮ சச்சிதானந்தம் என்பது இறைவன். இது சத், சித், ஆனந்த-மாகும்.
- ✮ சத்என்பது ஜீவன், சித்தென்பது ஜீவியம், மூன்றாவது ஆனந்தம்.
- ✮ சத்திற்கு ஞானம் உண்டு.
- ✮ நமக்குள்ள ஞானம் - அறிவு - செயல்பட நாம் அதைச் செயலாக மாற்ற வேண்டும்.

  பழத்தைச் சாப்பிட நினைத்தால் அதை எடுத்து உறித்து சாப்பிடுகிறோம்.

  முதலாளி எண்ணத்தைத் தொழிலாளி செயல்படுத்தலாம்.

  சத்தியஜீவியத்தின் எண்ணம் தன்னைத் தானே பூர்த்தி செய்து கொள்ளும்.

  பழத்தைச் சாப்பிட வேண்டும்என்று நினைத்தால் பழம் வயிற்றிலிருக்கும்.
- ✮ சத்தியஜீவிய ஞானம் சுய நிர்ணயமுடையது - தன்னைத் தானே பூர்த்தி செய்து கொள்வது.

  அதன் ஞானம் சுயஞானம், பிறரால் அளிக்கப்பட்டதில்லை.

  அதன் ஞானத்திற்கு சுய நிர்ணயம் உண்டு.

  எளிய மொழியில் சத்தியஜீவியம்,

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனிதன் விழிப்பற்று இருப்பதால் அவன் முன்னேற்றமும் அப்படியேயிருக்கிறது. உள்மனம் பெறும் ஆன்மீக அனுபவங்களை மனிதன் அறியாமலிருப்பதுண்டு.

***விழிப்பற்ற மனிதனின் ஆன்மீக வளர்ச்சி.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பெரியவர்களுடைய குறையைக் காணுதல் முடியும் என்றாலும் எவரும் அதில் ஈடுபடுவதில்லை. சிறிய மனிதனின் நிறைவைக் காண பெரிய மனதுடைய மனிதரால் மட்டுமே முடியும்.

***சிறியதன் நிறைவை பெரியதே காணும்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனத்தின் தலையாய செயல், சிந்தனையில்லை, புரிந்து கொள்வது. சிந்தனையின்றிப் புரிந்தால் மனம் உடலை நிர்ணயிக்கும்.

***சிந்திக்காதே, புரிந்துகொள்.***





# காதலரும், காவலரும்

சமர்ப்பணன்

வசந்த் இன்னும் சிறிது நேரத்தில் கீதாவை அவள் அலுவலகத்தில் வந்து சந்திப்பதாகத் தொலைபேசியில் கூறி இருந்தான். மூன்று வருடங்களுக்குப் பின் அவள் அவனைப் பார்க்கப் போகிறாள்.

தன்னை யாரும் கவனிக்கவில்லை என்பதை உறுதி செய்து கொண்டு, தன் அலுவலக மேஜை அறையில் யாருக்கும் தெரியாமல் ஒளித்து வைத்திருந்த வசந்த்தின் புகைப்படத்தைத் திருட்டுத்தனமாக எடுத்துப் பார்த்தாள். வசந்த் அதில் உயிரோடு நேரிலேயே இருப்பது போல அவளுக்குத் தோன்றியது. அவனது முகத்தை இலேசாக வருடிக் கொடுத்தாள். அவள் மேனியெல்லாம் சிலிர்த்தது.

மூன்று வருடங்களுக்குமுன் கல்லூரியில் படிக்கும்போது வசந்த்துடன் உண்டான காதல் அப்போது ஒவ்வொரு கணத்தையும் இன்பத்தால் நிரப்பியது. அவர்களின் தேர்வு விடைத்தாள்களை வெற்றிடத்தால் நிரப்பியது. திகட்டாத இன்ப நினைவுகளையும், உணர்வுகளையும் தந்த அந்தக் காதல், ‘திருமணம் செய்து கொள்ளும் வயதன்று இது. காதலர்களுக்கும் உணவு, உடை, வீடு வேண்டும். குடும்பம் அமைத்தால் செலவுக்குப் பணம் வேண்டும். பணத்தை சம்பாதிக்க வேலை வேண்டும், அதற்குப் படிப்பு முடிய வேண்டும்’ என்ற அறிவைமட்டும் தர மறந்துவிட்டது.

அதன் விளைவு? ஒரு நாள் காலையில் பதினொரு மணிக்கு, தாங்களே அமைத்துக் கொள்ளப் போகும் மண வாழ்க்கைக்கு ஆசி கேட்டு ஓர் உருக்கமான கடிதம் எழுதி வீட்டில் வைத்துவிட்டு, இருவரும் எங்கோ கிளம்பிவிட்டனர். எங்கே போய்விட முடியும்? இரயில் மிகவும் தாமதமாக வந்த காரணத்தால் ஊரைவிட்டு ஓடிப் போக முடியாமல், மதியம் ஒரு மணிக்கு இரயில் நிலையத்தில்

கீதாவின் தந்தை போலீஸ் இன்ஸ்பெக்டர் மாரியப்பனிடம் வசமாக மாட்டிக்கொண்டனர்.

முரட்டு மனிதரானாலும் தம் பெண் சம்பந்தப்பட்ட விஷயம் என்பதால் அமைதியாக இருவரையும் தம் போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றவர், கீதாவை ஒரு வார்த்தையும் திட்டவில்லை. தம் அத்தனை கோபத்தையும் வசந்த் மீது காட்டினார். 'அடி உதவுவது போல அண்ணன் தம்பி உதவமாட்டார்கள்' என்ற பழமொழியை போலீஸ்காரரைவிட வேறு யார் அதிகம் நம்பப் போகிறார்கள்?

அவள் கண்ணெதிரே அவனுக்கு விழுந்த அடிகள் அவளுக்கு தாங்கொண்ணா வலியைத் தந்தன. கதறி அழுதாள் கீதா. ''வசந்த் எனக்கு வெறும் நண்பன்தான். காதல்என்று தவறாக நினைத்து விட்டோம். எங்களுக்குள் காதல் இல்லை. அவனை விட்டுவிடுங்கள்'' என்று இரண்டு மணி நேரம் அவள் கதறியபின், அவளையும், வசந்த்தையும், அவன் குடும்பத்தினரையும் பலவிதமாக மிரட்டியபின், ஒரு வழியாக வசந்த்தை விட்டனர். உடனே அவன் வேறு கல்லூரிக்குச் சென்றுவிட்டான். பின்னர் படிப்பை முடித்துவிட்டு இருவரும் நல்ல வேலையில் சேர்ந்துவிட்டனர். மீண்டும் அவனை இப்போதுதான் பார்க்கப் போகிறாள்.

வசந்த் தன்னைத் தேடிக்கொண்டு காதலுடன் வர வாய்ப்பில்லைஎன்பது அவள் அறிவுக்குப் புரிந்தாலும், அறிவைக் கடந்த ஏதோ ஒன்று அவளை நம்பிக்கையுடன் காத்திருக்க வைத்தது. அது வீண் போகவில்லை.

புகைப்படத்தை பழைய இடத்திலேயே கீதா ஒளித்து வைத்த சிறிது நேரத்தில் வசந்த் வந்துவிட்டான். முன்பு போலவே அவன் கண்களுக்கு அவளும், அவள் கண்களுக்கு அவனும் மிகவும் அழகாகத் தோன்றினர்.

காதலர்கள் தினமும் சந்தித்தால் பேச ஆயிரம் விஷயம் இருக்கும். பல காலம் கழித்து சந்தித்தால், மௌனம் மட்டுமே பரிமாறிக் கொள்ளக்கூடியதாக இருக்கும். மௌனத்தின் பாரத்தைத் தாங்க முடியாதபோது, மூன்று வருடக் கதைகளைப் பேசி முடித்தனர்.

''என் அப்பாவும், மற்ற போலீஸ்காரர்களும் உங்களை எப்படி முரட்டுத்தனமாக அடித்தார்கள்! ரொம்பவும் வலித்ததா?'' மூன்று



வருடங்களுக்கு முன் வசந்த் பட்ட அடிகளால் தனக்கு உண்டான வலியை மீண்டும் உணர்ந்தாள் கீதா.

சிரித்தான் வசந்த். ''அவர்கள் என்னை அடிக்க அடிக்கத்தான், வாழ்ந்தால் உன்னோடுதான் வாழ வேண்டும்என்ற வேகம் எனக்கு வந்தது. அதனால்தான் உன்னைத் தேடி வந்திருக்கிறேன். கீதா, பிறரது அபிப்பிராயத்தைப் பற்றி எனக்கு எந்தக் கவலையும் இல்லை. நீ என்ன நினைக்கிறாய், உன் முடிவு என்ன என்பதுதான் எனக்கு முக்கியம். என்னோடு சேர்ந்து வாழ நீ ஆசைப்படுகிறாயா? நீ இன்னமும் என்னைக் காதலிக்கிறாயா?'' என்று கேட்டான் வசந்த்.

''காதல் என்ன நீர்க்குமிழியா கரைந்து போவதற்கு? எப்போதும் போல உங்களைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால், வசந்த், உங்களைக் காதலிக்கவே இல்லைஎன்று அத்தனை பேர் முன்னாலும் பொய் சொல்லி உங்களை அவமானப்படுத்தினேனே, ஒரு வேளை அந்தப் பொய்தான் இதுவரை தடையாக இருந்ததோ என்னவோ! எனக்குக் காதலைப்பற்றிப் பேச என்ன அருகதை இருக்கிறது?'' என்று இலேசாகக் கண் கலங்கினாள் கீதா. தவறு செய்யும்போது தோன்றாத அவமான உணர்வு, அதைப் பற்றி நினைக்கும்போது அவளுக்கு உண்டானது.

''நான் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தானே அப்படிப் பேசினாய்? அன்று அப்படி நீ சொல்லி இருக்காவிட்டால் நான் உயிர் பிழைத்திருப்பேனாஎன்பது சந்தேகம்தான். நீ அந்தப் பொய்யைச் சொன்னபின்தான் எனக்கு உன் மீது காதல் அதிகமாக வந்தது!'' என்றான் வசந்த்.

''நீங்கள் என்னை விட்டுக்கொடுக்காமல் பேசுவதைக் கேட்கக் கேட்க எனக்கும்தான் காதல் அதிகமாகிறது. அது அதிகமாகி என்ன பயன் வசந்த்? நாம் காதலிக்கிறோம்என்ற விஷயம் தெரிந்தால் மறுபடியும் உங்கள் உயிருக்குத்தான் ஆபத்து. எங்காவது ஓடிப் போனாலும் அப்பா கண்டுபிடித்துவிடுவார். பேசாமல் செத்துப் போய்விடலாம். அடுத்த பிறவியிலாவது ஒன்று சேர்ந்து வாழ்வோம்'' என்று புலம்ப ஆரம்பித்தாள் கீதா.

''உளறாதே கீதா, அடுத்த பிறவியில் நடக்கும்என்று நம்புவதை இந்தப் பிறவியிலேயே நடத்திக் காட்டுவோம்'' என்றான் வசந்த்.

''எப்படி நடத்துவது? உங்களுக்கு மனைவியாக எனக்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும். இதை யாரால் என் அப்பாவுக்குப் புரிய வைக்க முடியும்? நீங்கள் எனக்கு தாலி கட்டுவதை அவரே முரட்டுத்தனமாக எதிர்ப்பாரே!'' என்றாள் கீதா.

''தாலி திருமண உறவைப் பற்றி ஊருக்குப் புரிய வைக்க போட்டுக் கொள்ளும் அடையாளம். நான் இன்னமும் உனக்குத் தாலி கட்டவில்லை என்றாலும் நீ எனக்கு மனைவிதான். இரண்டு இதயங்கள் ஒன்றுபட்டபின், உடல்கள் உலகின் வேறு வேறு மூலைகளில் இருந்தாலும், எத்தனை வருடங்கள் பிரிந்திருந்தாலும், காதலர்களைப் பொறுத்தவரை அது கணவன், மனைவி உறவுதான்'' என்றான் வசந்த்.

''நீங்கள் பேசுவது நியாயமாகத்தான் தோன்றுகிறது. இதயங்கள் ஒன்றுபடாமல், உடல்கள் தினம் தினம் சேர்ந்தாலும், பிள்ளைகள் பெற்றாலும் அது அர்த்தமற்ற உறவுதான். இருந்தாலும் தாலி கட்டிக்கொண்டு ஊரறிய மனைவி ஆவதுதான் நல்லதுஎன்று நினைக்கிறேன். அதை விடுங்கள். நாம் இப்போது என்ன செய்ய முடியும்? உண்மையாகவே காதலித்தோம். ஆனால் கல்யாணம் செய்து கொள்ள முடியவில்லையே. யோசித்து பாருங்கள்'' என்றாள் கீதா.

''எத்தனையோ முறை யோசித்துவிட்டேன் கீதா. நாம் அப்போது எடுத்த முடிவில் தவறுகள் இருந்தன. படிப்பில்லாமல், பணமில்லாமல், வேலையில்லாமல், பலமில்லாமல் ஓடிப் போக நினைத்தோம். அதனால் அது நடக்கவில்லை. அந்த வகையில் உன் அப்பா நமக்கு நல்லதுதான் செய்திருக்கிறார்'' என்றான் வசந்த்.

வசந்த் தன் தந்தையைப் பற்றி உயர்வாகப் பேசியது கீதாவிற்கு மிகவும் பிடித்திருந்தாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. ''எதை வைத்து நாம் இப்போது சேர முடியும்என்று நினைக்கிறீர்கள்? அப்பாவை நினைத்தாலே பயமாக இருக்கிறது'' என்றாள் கீதா.

''நம்மிடம் நல்ல முறையில் திருமணம் செய்து கொண்டு குடும்பம் நடத்த வேண்டிய வயது, உடல் நலம், பணம், காதல், நல்ல மனம் எல்லாமே இப்போது இருக்கின்றன. ஆனால், உன் அப்பா தன் போலீஸ் பதவியைக் கொண்டு நம்மை பிரிக்கப் பார்ப்பார். அவர் தயவை எதிர்பார்த்திருக்கும் பலரும் நமக்கு எதிர்ப்பாக



இருப்பார்கள்'' என்றான் வசந்த்.

''அட, அதைத்தானே நானும் அப்போதிருந்து சொல்லிக் கொண்டு இருக்கிறேன்'' என்று கவலையுடன் சொன்னாள் கீதா.

''அவரது பதவி, அதிகாரம் தரும் பலத்தைவிட நம் ஆன்மா தரும் பலம் பெரியது. ஆன்மீக பலத்தைக்கொண்டு நாம் ஒன்று சேரலாம்'' என்றான் வசந்த்.

''போங்கள் வசந்த், போன தடவை நாம் ஓடிப் போவதற்கு முன்னால் நான் எத்தனை தெய்வங்களுக்கு வேண்டிக் கொண்டேன் தெரியுமா? நீங்கள் அடி வாங்கியதுதான் அதற்குக் கிடைத்த பலன்'' என்று அங்கலாய்த்தாள் கீதா.

''நாம் காதலித்துவிட்டு தெய்வங்களை ஏன் தொந்தரவு செய்ய வேண்டும்? நம் வாழ்க்கை நம் கையில், நம் உறுதியான முடிவில் இருக்கிறது. நாம் காதல்என்று சொல்கிறோமே, அது என்ன? உன் அழகான முகத்தைப் பார்த்ததும் மயங்கினேனே, அதுவா?'' என்று கேட்டான் வசந்த்.

''இருக்கலாம்'' வசந்த் அப்படிப் பேசியது கீதாவிற்கு சந்தோஷமாகவும், பெருமையாகவும் இருந்தது.

''அப்படி என்றால் உனக்கு வயதானாலோ, உன் அழகு மாறினாலோ என் காதல் மாறிவிடுமா? அப்போது நான் வேறு அழகான முகத்தைப் பார்த்து காதலிக்கலாமா?'' சிரித்தான் வசந்த். ஒவ்வோர் ஆணும் ஒரு பெண் மீது மட்டுமா பிரியம் வைத்திருக்கிறான்? பெண் இனத்தின் மீதே அல்லவா பிரியம் வைத்திருக்கிறான்!

''அதெப்படி? உங்கள் கண்களைப் பிடுங்கிவிடமாட்டேனா?'' என்றாள் கீதா.

''கண்களை ஆன்மாவின் ஜன்னல்கள் என்கிறார்கள். அவற்றைப் பிடுங்கிவிட்டால் எப்படிக் காதலிப்பதாம்? நாம் இத்தனை காலம் பார்க்காமல், பேசாமல் இருந்தபோதும், நாம் சந்தோஷமாகச் சேர்ந்து வாழ முடியும்என்ற நம்பிக்கையை அறிவைத் தாண்டிய ஒன்று தந்ததே, அதை ஆன்மாஎன்று சொல்லக்கூடாதா?'' என்றான் வசந்த்.

''தாராளமாகச் சொல்லிக் கொள்ளுங்கள். யார் வேண்டாம் என்றார்கள்?'' என்றாள் கீதா.

‘‘இரண்டு ஆன்மாக்களின் ஈர்ப்புதானே காதல்? நாம் செய்ய வேண்டியதை எல்லாம் சரியாகச் செய்துவிட்டு, அறிவை நம்பாமல் நம்மிடம் இருக்கும் ஆன்மாவை நம்பலாமே! அதன் பலத்தால் எதையும் சாதிக்கலாம்என்று எனக்குத் தோன்றுகிறது’’ என்றான் வசந்த்.

‘‘நாம் ஆன்மாவைப் பற்றி என்ன வேண்டுமானாலும் நம்பிக் கொள்ளலாம். ஆனால் அது எப்படி நம் கல்யாணத்தை நடத்தி வைக்கும்? அப்படி ஒரு குறுக்கு வழி இருந்திருந்தால், உலகத்திற்கு தெரியாமலா போய்இருக்கும்? அது தெரிந்திருந்தால் அம்பிகாபதியின் தலையை வெட்டி இருக்கமாட்டார்கள், அனார்கலிக்கு உயிரோடு சமாதி கட்டி இருக்கமாட்டார்கள். வலிமை உள்ளவர்கள்தான் வாழ முடியும். காதலர்களுக்கு வலிமை கிடையாது’’ என்றாள் கீதா.

‘‘வலிமை எங்கிருந்து வருகிறதுஎன்பதைப் புரிந்துகொண்டால், அதைப் பெறும் வழியையும் தெரிந்துகொள்ளலாம்’’ என்றான் வசந்த்.

‘‘அதிகாரத்தின் பலம்தான் கண் முன்னால் தெரிகிறதே’’ என்றாள் கீதா.

‘‘உலகம் தோன்றிய நாள் முதல் இருக்கும் மின்சாரத்தை, ஒருவர் கண்டுபிடிக்கும்வரை யாரும் அதைப் பயன்படுத்தவில்லை. அது கண்ணுக்குத் தெரியவில்லைஎன்றாலும், நாம் அதனால் பயன் பெறுவதில்லையா? ‘நான் மின்சாரத்தைப் பயன்படுத்தமாட்டேன்’ என்று பிடிவாதம் பிடித்தால் அது யார் தவறு? ஆன்மா மின்சாரம் போலத்தான். கண்ணுக்குத் தெரியவில்லை, என்றாலும் அதற்கு பலம் அதிகம். அதன் பலத்தால் எனக்குக் கண்டிப்பாக சம்சாரம் கிடைக்கும்’’ என்றான் வசந்த்.

‘‘அந்த சம்சாரம் கண்டிப்பாக நானாகத்தான் இருப்பேன். நீங்கள் இத்தனை தூரம் சொல்வதால் எனக்கும் கொஞ்சம் நம்பிக்கை வருகிறது’’ என்றாள் கீதா.

‘‘அது போதும். அறிவுக்குப் பொருத்தமான எல்லாவற்றையும் செய்துவிட்டோம். இனி செய்வதற்கு ஒன்றுமில்லை. ஆன்மாவையும், அதன் பலம் உன் அப்பாவின் பலத்தைவிட அதிகமானது என்பதையும் மட்டும் நம்பிக்கொண்டு உன் வீட்டிற்குப் போவோம். உன் அப்பாவைப் பார்த்துப் பேசுவோம், கிளம்பு’’ என்றான் வசந்த்.



‘‘அப்படிப் போனால் என்ன நடக்கும்?’’ என்று கேட்டாள் கீதா.

‘‘யாருக்குத் தெரியும்? அது ஆன்மாவின் பிரச்சினை. தேனிலவுக்கு எங்கு போவது என்பதுதான் நம் பிரச்சினை’’ என்றான் வசந்த். வெட்கப்பட்டாள் கீதா. வசந்த்தின் தைரியம் அவளையும் தொற்றிக் கொண்டது. காதலனோடு திருமணம் நடக்கக்கூடும்என்ற எண்ணம் அவளுக்கு மிகுந்த உற்சாகத்தைத் தந்தது.

இருவரும் ஓர் ஆட்டோவில் ஏறி கீதாவின் வீட்டிற்குச் சென்றனர். வசந்த்தின் தோள்களில் கீதா சாய்ந்து கொண்டு வந்தாள். அவனோ உரிமையுடன் அவள் தோள்களைச் சுற்றி தன் இடக் கையைப் போட்டுக் கொண்டான். என்ன இன்பம், என்ன இன்பம்! ஆட்டோ டிரைவர் இவர்களின் இன்ப உரசல்களைக் கண்டு கொள்ளவில்லை. பாவம், அவர் குடும்பக் கவலை அவருக்கு. ஆட்டோ நிற்காமல் ஓடிக் கொண்டே இருந்தால் எத்தனை நன்றாக இருக்கும் என்று இருவருக்குமே தோன்றியது. ஆனாலும் கீதாவின் வீடு வந்துவிட்டது.

கீதாவின் வீடு ஒரே களேபரமாக இருந்தது. வயதான போலீஸ்காரர் அவர்கள் இருவரும் வீட்டிற்குள் நுழையுமுன்பே கீதாவின் அருகே வந்து ஒரு சல்யூட் போட்டு, ‘‘சின்னம்மா, கமிஷனர் அய்யா நம் வீட்டிற்கு விருந்திற்கு வந்திருக்கிறார்’’ என்ற தகவலை சொல்லி சந்தோஷப்பட்டார். கீதாவுடன் சென்றதால் சந்தடிசாக்கில் வசந்திற்கும் ஒரு சல்யூட் கிடைத்தது.

இந்தச் சமயத்தில் வீட்டிற்குள் போவதா என்று ஒரு வினாடி கீதா தயங்க, வசந்த் சிறிதும் தயங்காமல் அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்தான்.

வீட்டின் வரவேற்பறையில் கமிஷனர் தன் பதவி தந்த தெம்பில் கம்பீரமாக அமர்ந்து, உரத்த குரலில் பேசிக் கொண்டிருந்தார். கீதாவின் அப்பா இன்ஸ்பெக்டர் மாரியப்பனும், இன்னும் சில அதிகாரிகளும் அவரைச் சுற்றி பவ்யமாக அமர்ந்திருந்தனர்.

வசந்த்தையும் கீதாவையும் அருகருகே தன் வீட்டிற்குள்ளேயே பார்த்த மாரியப்பனுக்கு முகம் கறுத்து சிறுத்தது. என்ன செய்யலாம் என்று அவர் யோசிக்குமுன், கமிஷனர் ஆர்ப்பாட்டமான குரலில் கீதாவை வரவேற்றார், ‘‘வாம்மா கீதா, எப்படி இருக்கிறாய்? தம்பி யார்?’’ என்று பிரியத்துடன் விசாரித்தார்.

அவள் பதில் சொல்லுமுன், ‘‘தம்பி, உனக்கு எந்த ஊர்?’’ என்று வசந்த்தை உற்றுப் பார்த்துக் கேட்டார். ‘‘மதுரை சார்’’ என்று பணிவுடன் வசந்த் சொன்னான்.

கமிஷனர் குரலில் பரபரப்புடன், ‘‘உனக்கு தல்லாகுளத்தில் சீனிவாசன் என்று யாரையாவது தெரியுமா?’’ என்று கேட்டார். ‘‘என் அப்பா பெயர் சீனிவாசன். தல்லாகுளத்தில் முன்பு சீனி சில்க்ஸ் என்ற பெயரில் துணிக்கடை வைத்திருந்தார்’’ என்றான் வசந்த்.

‘‘அதுதானே பார்த்தேன். அப்படியே உன் அப்பாவை உரித்து வைத்திருக்கிறாயே! உன் வயதில் சீனிவாசன் உன்னைப் போலவேதான் இருப்பான். இப்படி வந்து என் பக்கமாக உட்கார்’’ என்ற கமிஷனர் தம் பழைய நினைவுகளில் மூழ்கினார். ‘‘நானும், அவனும் பள்ளிக்கூட சிநேகிதர்கள். அவன் என் அண்ணன் மாதிரி. நான் வசதி குறைவானவன். அவன்தான் என் படிப்புச் செலவைப் பார்த்துக் கொண்டான். என் கமிஷனர் பதவி அவன் போட்ட பிச்சை. இருபது வருடங்களுக்கு முன்னால் நான் டெல்லியில் இருந்தபோது உன் அப்பா இறந்துவிட்டதாகக் கேள்விப்பட்டேன். அப்புறம் எந்தத் தொடர்பும் இல்லை’’ என்றார். வசந்த்தைப் பற்றி மேலும் மேலும் கமிஷனர் உற்சாகமாக விசாரிக்க, இன்ஸ்பெக்டர் மாரியப்பனுக்கு விஷயம் தம் கைகளை மீறிப் போய்க்கொண்டிருப்பது புரியத் தொடங்கியது.

‘‘சொத்து வழக்குகளில் சிக்கி சின்னாபின்னமாகிவிட்டது. அதற்கப்புறம் நானும், அம்மாவும் சென்னை வந்துவிட்டோம் சார்’’ என்றான் வசந்த்.

‘‘சார் என்ன சார், செவிட்டிலேயே அறைந்துவிடுவேன். சித்தப்பா என்று கூப்பிடு’’ என்று அதிகாரமாக அன்பைக் கொட்டிய கமிஷனர், ‘‘ஆமாம், உள்ளே நுழையும்போது நீயும், கீதாவும் கைகளைக் கோத்துக்கொண்டு வந்ததைப் பார்த்தேன். போலீஸ்காரன் கண்ணிலிருந்து எதுவும் தப்பிக்க முடியாது. காதலா?’’ என்று கேட்டு சிரித்தார்.

‘‘ஆமாம், சித்தப்பா’’ பளிச்சென்று பதில் சொன்னான் வசந்த்.

‘‘பாரையா தைரியத்தை! போலீஸ்காரனுக்கு மாப்பிள்ளையாக வர உனக்கு தகுதி இருக்கிறது’’ என்ற கமிஷனர், கீதாவைப்



பார்த்து, ‘‘என்னம்மா கீதா, உனக்கு சம்மதம்தானே?’’ என்றார்.

‘‘என்ன மாமா, அவரைக் கட்டிக்கொள்ள எந்தப் பெண்ணுக்காவது கசக்குமா?’’ என்று மெல்லச் சொன்னாள் கீதா.

‘‘அப்படிப் போடு அருவாளை’’ என்று சிரித்த கமிஷனர், யாரோ பெற்ற பெண்ணுக்கும் பையனுக்கும் தான் திருமணம் பேசிக் கொண்டிருப்பதை உணர்ந்து கொண்டு, ‘‘என்னய்யா மாரியப்பன், உன் பெண்ணுக்கும், என் பையனுக்கும் முடித்துவிடலாமில்லையா?’’ என்று இன்ஸ்பெக்டர் மாரியப்பனைப் பார்த்து உரத்த குரலில் கேட்டார்.

‘‘சார், பெண்ணுக்குக் கல்யாணம் செய்ய வேண்டிய வயதுதான். ஆனால், பையனைப் பற்றி விசாரிக்க வேண்டுமே’’ என்று தயக்கத்துடன் பணிவாகச் சொன்னார் இன்ஸ்பெக்டர் மாரியப்பன்.

‘‘அட போய்யா, நீயும் உன் விசாரணையும். அவனைப் பற்றி என்னிடம் விசாரி. வசந்த் என் பையனைப் போல, தெரிகிறதா? அவன் குடும்பம் எப்பேர்ப்பட்ட குடும்பம்! ஜாதி, ஜாதகத்தை எல்லாம் விட்டுத்தள்ளு. பெண்ணுக்கு நல்ல வாழ்க்கை தானாக வரும்போது எதையாவது சொல்லி நாமே அதைக் கெடுக்கக்கூடாது’’ என்றார் கமிஷனர்.

அதற்கு மேல் அவரை மறுத்துப் பேச துணிவில்லாத இன்ஸ்பெக்டர் மாரியப்பன், ‘‘ஆகட்டும் சார், நீங்கள் இத்தனை தூரம் சொல்லும்போது அப்படியே செய்துவிடலாம்’’ என்றார். அதிகாரத்தால் முரட்டுத்தனத்தை மாற்ற முடியாவிட்டாலும், அடக்க முடியாதா என்ன!

திடீரென்று பூத்த நாணத்தால் கீதா தன் தலையை சிறிது கவிழ்த்துக் கொண்டு ஓரக் கண்ணால் ஏதோ இரகசியச் செய்தியை வசந்த்திற்கு அவசரமாக அனுப்ப, அதைப் பெற்றுக் கொண்ட வசந்த் பதில் செய்தியை தன் கண்களால் உடனே மறுதபாலில் அனுப்பி வைத்தான்.

காதலர்களின் கண்கள் பேசும் சங்கேத மொழி அவர்களுக்கு மட்டும்தான் புரியும். நமக்கெங்கே புரியப்போகிறது!

*முற்றும்.*

**சத்தியஜீவிய சக்தி உடலில் உள்ள மனத்தில் (*material mind*) செயல்பட்டதால் குணமான வியாதியைப் பற்றிய செய்தி இது.**

**– *Volume IV, Page 73***

இவர் பாரிஸில் உள்ள அன்பர். 3 முறை எச்சரிக்கை வந்ததை இவர் பாராட்டவில்லை. ஒரு நாள் உடல் பாதி பாரிச வாயுவில் பாதிக்கப்பட்டது. அடுத்த பகுதிக்கும் பரவ ஆரம்பித்தது. (இடப் பக்கம்). அந்த நேரம் அன்பர் அழைத்தார். ஒரு பாதி அசைவிழந்தும், அடுத்த பகுதிக்கு அது தொடர்வதையும் கண்டார். ஒரு சில நிமிஷத்தில் ஒரு பிரம்மாண்டமான சக்தி தன்னுள் நுழைவதைப் பார்த்தார். வியாதி பரவுவது உடனே நின்றது. இடப் பக்கம் பாதிக்கப்படவில்லை. வலப் பக்கம் குணமடைய ஆரம்பித்தது. அன்னைக்கு தந்தி வந்தது. அன்பர் இதயம் பாதிக்கப்பட்டதுஎன தந்தி கூறியது. உண்மையில் பாதிக்கப்பட்டது இதயமில்லை. மூளை பாதிக்கப்பட்டது. ''என் கையில் தந்தியிருந்தது. அதன் மீது ஒன்றுமில்லை, கவலைப்பட வேண்டாம் என எழுதியிருந்தது'' என்று அன்னை கூறினார். பிறகு விபரமான கடிதம் வந்தது. கடிதம் வந்தவுடன் அன்னை சிரித்து, "ஒன்றுமில்லை, கவலைப்பட வேண்டாம்" என்று கூறினார். அன்பர் அருகே ஒரு சக்தியைக் கண்டார். அது வாழ்விலில்லாத சக்தி. அது அதிசயமாகச் செயல்பட்டது.

---

மேலே கூறியது அஜெண்டா செய்தி. இது எப்படிச் செயல்படுகிறதுஎன ஓரளவு உதாரணம் மூலம் கூறலாம். நரம்பு, மூளை வேலை செய்யும் உதாரணத்தாலும், கம்ப்யூட்டர் மூலமாகவும், இன்டர்நெட் மூலமாகவும் கூறலாம். ஊர் நடைமுறை மூலம் விளக்கலாம். பேர் அளவுக்கு விஷயங்கள் விளங்கும்.



❑ ***முடிவான கட்டத்தில் முழுமையாக விளங்க அன்னையை உள்ளுணர்வில் அறிய வேண்டும்.***

*சில உதாரணங்கள்:*

(1) காலில் கட்டி வந்திருக்கும். ஜுரம்எனில் மருந்து போடுகிறோம், சில நாட்களில் குணமாகிறது. சில சமயங்களில் குணமாக நாளாகிறது. உடல் தெம்பு இழந்து போகிறது. என் ஆசிரியர் அதிக அனுபவமுள்ளவர். அவர் கட்டியைப் பார்த்து சிரிக்கிறார். அடுத்த வாரம் பரிட்சை வருகிறது. அதற்குப் போக விருப்பமில்லாததால் கட்டி வருகிறது என்கிறார். நான் அவர் கூறுவதை அப்படியே நம்பினேன். என் மனத்தை சோதனை செய்ததில் உண்மையறிந்து வெட்கப்பட்டேன். இரவு தூங்கி எழுந்தேன். தூக்கம் ஆழ்ந்து அமைதியாக இருந்தது. கட்டி நினைவில்லை. குளிக்கப் போனபொழுது கட்டியிருந்த இடத்தில் கை பட்டது. கட்டி வாடி சுருங்கி மறைந்துவிட்டது.

☆ ***மனம் உடலைக் கட்டுப்படுத்துவதால் மனத்தெளிவு கட்டியைக் குணப்படுத்தும்.***

(2) திடீரென கொல்லையில் திருடு போகிறது. கட்டுப்படவில்லை. அதிகமாக முயன்றால் அதிகமாகத் தொந்திரவு வருகிறது. பிறகு விவரம் தெரிந்தவர் ஒருவரை விசாரித்தேன். "உங்கள் பக்கத்துக் கொல்லையை வாங்க நினைப்பது நாட்டாமைக்கு ஒத்து வரவில்லை. அதனால் இது நாட்டாமைக்காரன் கொடுக்கும் தொந்திரவு'' என்று சொன்னார். கொல்லை சொந்தக்காரர் மைத்துனர் இன்ஸ்பெக்டராக இருப்பது நாட்டாமைக்குத் தெரியாது. இன்ஸ்பெக்டர் நாட்டாமைக்-காரரை அழைத்து திருட்டு விவரம் கேட்டார். திருடு நின்றுவிட்டது.

(3) நரம்பு உடலைக் கட்டுப்படுத்துகிறது. மனம் நரம்பைக் கட்டுப்படுத்துகிறது. நரம்பில் உள்ள மனம் அதிக பலம் வாய்ந்தது. செல்லில் மனம் உண்டு (cellular mind). இதைவிட அதற்கு பலம் அதிகம். அதையும் கடந்து உடல் ஜடமாக

இருப்பதில் ஜட மனம் material mind உள்ளது. அது க்ஷணத்தில் குணப்படுத்தும்.

(4) சத்தியஜீவிய சக்தியை நாம் எந்த ஆழத்தில் பெறுகிறோமோ, பலன் அது போலிருக்கும். மேற்சொன்ன நிகழ்ச்சியில் material mind சக்தியைப் பெற்றதாக அன்னை கூறுகிறார். அதனால் குணம் அதிசயமாக வருகிறது.

(5) 25, 30 வருஷத்திற்குமுன் கையால் எழுதி டைப் செய்ய வேண்டும். கம்ப்யூட்டர் வந்தபின் நேரடியாக டைப் செய்யலாம். எழுதியதை ஸ்பெல்லிங் திருத்த நாம் ஒரு முறை படிக்க வேண்டும். கம்ப்யூட்டரே தவறு இருந்தால் திருத்தச் சொல்கிறது. ஸ்பெல்லிங் திருத்துவது போல் வேறு பிழைகளையும் கம்ப்யூட்டர் திருத்துகிறது. ஒரு புத்தகத்திற்கு index எழுத பக்கம் பக்கமாகப் படித்து சொற்களை வரிசைப்படுத்தி எழுத புத்தகம் எழுதியதைவிட அதிக நாள் வேலை. கம்ப்யூட்டரில் புத்தகமிருந்தால் எந்த எந்த சொல் indexஇல் இருக்க வேண்டும் என டைப் செய்தால் கம்ப்யூட்டர்

i. அச்சொற்களை அகர வரிசைப்படுத்தும்.

ii. அச்சொற்கள் வரும் பக்கங்களை தானே டைப் செய்யும்.

பல நாள் வேலை சில மணியில் தவறின்றி முடியும்.

நாம் எந்த software பயன்படுத்துகிறோம்,

எந்த அளவுக்கு நமக்குக் கம்ப்யூட்டரில் பழக்கமிருக்கிறது என்பதைப் பொறுத்துப் பலன் உண்டு.

அன்னையை நாம் எந்த அளவில் ஏற்றுக் கொள்கிறோமோ அந்த ஆழத்தில் அவர் சக்தி செயல்படும். கம்ப்யூட்டரில் உள்ள இவ்வளவு வேலையும் கம்ப்யூட்டர் தெரியாத அன்பர் பெற அவர் ஆழ்ந்து அன்னையை அழைத்தால் பாரிச வாயு அதிசயமாகக் குணமானதுபோல் இத்தனையும் செய்யும் வசதி உடனே அன்பருக்கு எழும்.

❀ ❀ ❀



# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## 991) தாழ்ந்த பிறப்பும் சமூகம் விரும்பிப் புறக்கணித்ததும் பின்னர் பிரபலத்தையும் வெற்றியையும் நாடச் செய்யும்.

***புறக்கணிக்கப்பட்டவன் பிரபலத்தை நாடுவான்.***

ஏழ்மையில் உள்ள எவரையும் உலகம் திரும்பிப் பார்க்காது. நோய் வந்தவிட்டால் அன்பான குடும்பம் அதிகமாகக் கவனிக்கும். அன்பில்லாத குடும்பத்தில் அது ஒரு சாபம். தாழ்ந்த ஜாதியில் பிறந்துவிட்டால் அன்று கொடுமைக்கு ஆளாவான். இன்று ஆயிரவிதமான ஆதரவுண்டு. **தன் நிலை தன்னைச் சுடும்படி அவன் உணர்வான்**.

பழகத் தெரியாதவன் 10 பேருடனிருந்தாலும் எவரும் அவனுடன் பேசமாட்டார்கள். அவனே போய் சேர்ந்து கொள்ள வேண்டும். Pride and Prejudiceஇல் மேரியை வீட்டாரும் கவனிப்பதில்லை, ஊராரும் கவனிப்பதில்லை. எல்லா டான்ஸுக்கும் தவறாமல் போவாள். ஒரு முறைகூட அவளுடன் எவரும் ஆட வந்ததில்லை. கோபக்காரர்களை அறவே விலக்குவார்கள். வீட்டில் விசேஷம் வந்தால் இதுபோல் புறக்கணிக்கப்பட்டவர் நிலை மனம் கொந்தளிக்கும். எல்லார் வீட்டு விசேஷத்திற்கும் தவறாமல் போயிருந்தாலும், எவரும் வரமாட்டார்கள். பலர் வரவில்லையென்பார்கள். சிலர் வருவதாகக் கூறிவிட்டு வரமாட்டார்கள். வந்த கொஞ்சம் பேர் ஏன் வந்தார்கள்என நினைக்கும்படி நடந்து கொள்வார்கள்.

பெற்றோரில்லாத பிள்ளைகள், கடைசி மார்க் வாங்கும் பையன், ஏமாந்த சோணகிரி, அனைவரையும் நம்பி ஏமாந்து போகும் இளைஞன், பயந்த சுபாவமுள்ளவர், பேசத் தெரியாதவர் நிலை இது. ஒரு நாள் போவது இவர்கட்கு ஒரு யுகமாக இருக்கும். SSLC

வகுப்பில் ஜெயராமன் என்ற மாணவன் ஆங்கிலத்தில் முதல் மார்க் வாங்கினான். அது வரை அவன் பாஸ் மார்க் வாங்கியதில்லை. ஆசிரியருக்கு யார் ஜெயராமன் எனத் தெரியவில்லை. வகுப்பில் அவனை எழுந்திருக்கும்படி அழைத்தார். அவன் எழுந்து நின்றான். ஆசிரியருக்கு அடையாளம் தெரியவில்லை. விசாரித்தார். 2 வருஷமாக உங்கள் வகுப்பில் படிக்கிறேன் என்றான். அவருக்குப் புரியவில்லை. மாணவன் மனம் எப்படியிருக்கும்? ஒரு பள்ளியில் 4 ஆண்டு வேலை செய்த ஆசிரியர் 15 ஆண்டுகள் கழித்து தலைமையாசிரியர் ஓய்வு பெற்று சிரமப்படுகிறார்எனக் கேள்விப்பட்டு தம் ஒரு மாத சம்பளத்தை அனுப்பி கடிதம் எழுதினார். தலைமையாசிரியருக்கு யார் இது என்று நினைவு வரவில்லை. அவர் வாழ்நாளில் அதுபோல் நடந்த ஊழியர் அவர் ஒருவரே. தலைமையாசிரியர் மறந்துவிட்டாரெனில் விஸ்வாசத்துடன் எழுதியவர் மனம் எப்படிப் புண்படும்?

இன்கம் டாக்ஸ் ஆபீசில் கிளார்க் வேலையைத் தியாகம் செய்து அரசியலில் முழு நேர ஊழியரானார். அவர் கட்சி சிதைந்து விட்டது. வயது 50 ஆனபின் குடும்பத்தை எப்படிக் காப்பாற்றுவது? ஊரில் நடக்கும் எல்லா விசேஷங்கட்கும் தவறாது போவார். **அழைப்பு வந்தாலும் வாராவிட்டாலும் தானே போவார்**. அவர் தமக்கை மகன் பிரபல எழுத்தாளராகி காமராஜைப் பார்க்கப் போனார். ஊர் பேர் விசாரித்து, உங்கள் ஊரில் என்னுடன் ஜெயிலில் இருந்தவர் ஒருவர் என காமராஜ் விபரம் கூறினார். அது எழுத்தாளர் மாமா. காமராஜ் விசாரித்தார். பிறகு இருவரும் சந்தித்தனர். புறக்கணித்தால் மனம் புண்படுகிறது. கவனித்தால் புளகாங்கிதமடைகிறது. புறக்கணிக்கப்-பட்டவன், ஒதுக்கப்பட்டவன், உதாசீனத்திற்கு ஆளானவன் அனுபவத்தால் மனம் வருத்தப்படாமலிருக்கக் கற்றுக் கொள்கிறான். **அது பெரிய மனநிலை**.

- ☆ அம்மனநிலையை எரிச்சலில்லாமல் ஏற்றால், அம்மனநிலைக்குப் பிரபலம் தேடி வரும்.
- ☆ **நாம் தேடாதது நம்மைத் தேடி வருவது சட்டம்**.



- ☆ அனைவருக்கும் பணிவதை அனுபவமாய் பரம்பரையாய் ஏற்றவளை அனைவரும் விரும்பிப் பணியும் நிலைக்கு வாழ்வு உயர்த்தும்.
- ☆ ஒதுக்கினால் மனம் புழுங்குபவருண்டு. அதுவே நமக்குரியது என்ற மனநிலை வர நாளாகும், பல தலைமுறைகளாகும். **புழுக்கம் நின்றால், பிரபலம் நாடி வரும்**.
- ☆ ஒதுக்கப்பட்டவனுக்குக் கோபம் வாராது.
  கோபம் வாராதவனுக்கு அதிர்ஷ்டம் வரும்.
- ☆ தாழ்ந்த பிறப்புக்கு எல்லாக் கொடுமைகளும் உண்டு.
  கொடுமைகளை அனுபவித்தவர்க்குப் பிறகு எல்லாப் பெருமைகளும் வரும்.
- ☆ தேடினால் அபரிமிதமாக வரும்.
  தேடாவிட்டால் அனைத்தும் வரும்.

❍ ❍ ❍

## 992) வாழ்நாள் முழுவதும் தேடிய புனிதம் பூர்த்தியடையும் பொழுது அது அமிர்தமான அற்புதமாகி வாயால் பேசினால் அழியும் இனிமையாகிறது.

***அமிர்தமான புனிதம் சொல்லாலும் அழியும்.***

பகவான் ஸ்ரீ அரவிந்தர் எழுதிய பெருநூல்கள் 8. அவை ஆர்யாவில் வெளிவந்தன. சிந்தனை மணிகள் 547. அது தவிர காவியம், செய்யுள்கள், கட்டுரைகள்என 30 வால்யூமாக வெளிவந்தவை ஏராளம். அவற்றுள் **இறைவன் வரும் தருணம்**என்பது ஒரு பக்கக் கட்டுரை. நெடுநாள் முயன்ற பயன் வரும் தருணத்தில் செய்யும் காரியங்கள் பெரும்பலனைத் தரும்என்பது கருத்து. ஸ்ரீ அரவிந்த அவதாரம் அப்படிப்பட்ட தருணத்தை அறிவிக்க வந்தது. **இந்த நேரம் விழிப்புடன் செயல்படும் மனித ஆத்மா, சத்தியஜீவனாக மாறும் என்கிறார்**. புல், பூடாகி, பல்விருகமான உலகில் குரங்கு மனிதனாகி மனிதன் சத்தியஜீவனாக மாறும் நேரம் வந்தது.

சத்தியஜீவியம் 1956இல் வந்தது. அதிலிருந்து 4 ஆண்டுக்கு ஒரு முறை அதன் 4 ஆண்டு நிறைவு விழாவில் அந்த சக்தி வெளிப்படுகிறது. அதை நம்மால் உணர முடியவில்லை. நாம் கண்மூடியாக unconscious வாழ்கிறோம். இவை பெரிய விஷயம். சிறிய மனிதன் அறிய முடியாதவை. முதலில்லாதவனுக்குத் தேடி வரும் பெருமுதல், வேலையில்லாதவனுக்கு கிடைக்கும் பெரிய வேலை, எளிய வரனும் வரும் வாய்ப்பில்லாத வீட்டிற்கு வரும் மிகப்பெரிய வரன், வேலையில்லாதவனை வெளிநாட்டிற்குக் கம்பனிச் செலவில் அனுப்ப வரும் வாய்ப்பு, பெரிய தொழிலைக் கற்கும் சந்தர்ப்பம் எல்லோரும் அறிவது. இவை வருவதில்லை. முயன்று பெறுவதில்லை. முயலாமலும் வருபவை. முயன்றும் கிடைக்காதவை. வாழ்நாள் முழுவதும் முயன்று கிடைக்கக்கூடியவை. **அன்பர்கட்கு அனுதினமும் அவர் அறிந்தும் அறியாமலும் வந்து கொண்டிருக்கும் வாய்ப்புகள்**.

புத்தர், சங்கரர், ஏசு, மகாத்மா காந்தி, ஸ்ரீ அரவிந்தர், தாகூர், சர்ச்சில் போன்றவரை உற்பத்தி செய்த குடும்பங்கள் பல தலைமுறைகளாக முயன்று, ஒவ்வொரு தலைமுறையிலும் சற்று முன்னேறி, முடிவாக ஒரு பெரிய ஆத்மாவை உற்பத்தி செய்கிறது. **அப்படிப்பட்ட மகாபுருஷர் பிறந்த பிறகு அக்குடும்பம் இருந்த இடம் தெரியாமல் அழிகிறதுஎன்பது ஆன்மீக தத்துவம்**. தொண்டர்கள் பஞ்சாயத்து, முனிசிபாலிட்டி, சட்டசபை, பார்லிமெண்ட், மந்திரி சபையென நீண்ட அனுபவம் பெற்று பிறகு மாநில, அகில இந்திய தலைவராவதுண்டு. முடிவுவரை வந்து, முடியாமற் போவதுண்டு. அரிசி வியாபாரம், ரைஸ்மில்என சிறுக ஆரம்பித்து சர்க்கரை ஆலை, பஞ்சாலையென சொத்து சேர்வதுண்டு. ஆயிரம் பேர் முயன்றால் ஒருவருக்குப் பலிக்கும். பலிக்கும் நேரம் முக்கியமானது. அந்த நேரம் நுட்பமான நேரம். பேரம் படிந்து கையெழுத்தாகி, ரிஜிஸ்டராக வேண்டும்; பெண் பார்த்து, பிடித்து, நிச்சயமாகி, திருமணமாக வேண்டும்; இன்டர்வியூ வந்து, தேறி ஆர்டர் வந்து, வேலையில் சேர்ந்து, ஊர்ஜிதமாக வேண்டும். ஆன்மீகத்தில் மோட்சம் தேடுகிறார்கள். வரம் கேட்கிறார்கள். ஆண்டவன் தரிசனம் பெற்று, வரம் கேட்டு, கொடுத்து, பலிக்க வேண்டும்.



- அந்த நேரம் மனமும், சொல்லும், செயலும் அடங்கி, அழகாக சிறந்து இருக்க வேண்டிய நேரம்.
- ***அது நமக்குக் கட்டுப்படாத நேரம், வாய் பேச முனையும், குணம் கடுமையாகும், செயல் குதர்க்கமாகும். நாம் பேசாமலிருந்தால் உலகம் நம்மைச் சீண்டும்.***

அந்த நேரம் மனித முயற்சியாலும் வரும். உலகம் முயன்று ஒருவர் பெறுவதாகவும் அமையும். அருள் தேடி வந்து தரும்; பேரருள் பெருவாரியாக வாழ்வில் மலரும் - அந்த நேரம் மனித அறிவுக்கு வினோதமாக, விசித்திரமாக, குதர்க்கமாக நடக்கத் தோன்றும். நடந்தால் வாய்ப்பு அழியும். நினைத்தாலும் விலகும். SSLC மாப்பிள்ளைக்கு உரிய அழகற்ற கறுப்பான பெண்ணை MA படிக்கும் மாணவன் மாமா உறவுடையவன் விரும்பிக் கேட்டான். பெண் வீட்டார் பெற்ற கர்வம் அதை விலக்கியது. 8ஆம் வகுப்புடன் படிப்பு முடிந்தவனுக்கு மாமா படிப்பு பெற்றுக் கொடுத்த பின் தினசரி 75 பைசா சம்பாதிக்கும் தகப்பனார் மகனுக்கு ரூ.250/- சம்பளம் பெறுவது பொறுக்காமல் பல முறை அவனுக்கு வந்த வேலை இரத்தாயிற்று. ரூ.650 சம்பாதிப்பவர் ரூ.1,000 கேட்டபொழுது ரூ.1,350/- சம்பளம் கிடைத்து சேர்ந்தபின் மனைவி மெச்ச விரும்பினார். மனைவி எதிர்த்தாள். வேலை போயிற்று. 20 இலட்சம் செலாவணி கம்பனிக்கு அருளால் 40 இலட்சம் வருமானமும், 800 கோடி தொழிலும் 15 நாட்களில் பெற்றபின் பெற்றுக் கொடுத்தவரை தூஷித்துப் பேசத் தோன்றியது. அது விலகியது. முயற்சி மனிதனுடையது. பலன் அருள் தருவது.

- பலன் அகத்தில் உருவம் பெற்று, சிறந்து, செறிந்து, சிறப்பும் பெற்று, தாய் வயிற்றுக் குழந்தை போல வெளிவரும். வெளிவர அவசரப்பட முடியாது. 1 மணியும் முன்னதாக வாராது.

***அவசரப்பட்டால் அழியும்.***

- ஒரு முறை வந்து தவறினால் மனிதனுக்கு மீண்டும் வாராது. அன்பருக்கு மீண்டும் வரும். நன்றியுடன் ஏற்கும் மனநிலை அரிது.

எனக்கு எதுவுமே வரவில்லை என்றவருக்கு சம்பளம் 4 மடங்கானது.

உடலோடு வந்த நோய் தனக்குப் போனது, தாயாருக்குப் போனது, தகப்பனார் 3 முறை உயிர் பிழைத்தது, நெடுநாள் ஆசை பெருவாரியாகப் பூர்த்தியானது ஆகியவற்றைச் சுட்டிக்காட்டியும் அவருக்கு நன்றி எழவில்லை. அதுவே மனித சுபாவம்.

○ ○ ○

**993) ஆழ்ந்து மறைக்க வேண்டிய இரகஸ்யம் உயர்ந்தோர்க்கும் தாழ்ந்தோர்க்கும் உரிய சட்டமாக எதிரெதிரான காரணத்தால் ஏற்படுகிறது.**

***மறைக்கும் நிர்ப்பந்தம் மகானுக்கும் மடையனுக்கும் உண்டு.***

- ✫ உயர்ந்ததும் தாழ்ந்ததும் ஒன்றே, உருவம் வேறு.
  **ஜடமும் சச்சிதானந்தமும் ஒன்றே**.
- ✫ பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பார்க்கும் கூழுக்கு உப்பில்லை என்பார்க்கும் வருத்தம் ஒன்றே.
- ✫ செயல் வேறுபடலாம், நோக்கம் ஒன்றாகும்.
- ✫ முதல் வகுப்பு மாணவனுக்கும், M.A. மாணவனுக்கும் முயற்சி வேறு தரம் ஒன்றே.
- ✫ பிரம்மத்தை அறிபவனுக்கும் திருடனுக்கும் நினைவு மாறுபடாது.
- ✫ முயற்சி ஒரே மாதிரியானது, உற்சாகம் ஒன்றாகும், பலன் தரும் திருப்தியும் இருவருக்கும் ஒன்றே.
- ✫ விறகு உடைப்பவனுக்கும், சமையல் செய்பவர்க்கும், நகை செய்பவர்க்கும், இலட்சம் பேர் கூட்டத்தில் பேசுபவனுக்கும் திறமைகள் வேறு.

***திறமையின் தரம் வேறுபடாது.***



- ✫ நிலை மாறும், செயல் மாறும், குணம் மாறாது.
- ✫ 10க்கும் 11க்கும் வித்தியாசம் 1.
- ✫ 1,00,000க்கும் 100,001க்கும் வித்தியாசம் 1.
- ✫ தாழ்ந்தவன் இரகஸ்யம் தன் ஆதாயத்திற்காக.
- ✫ உயர்ந்தவர் இரகஸ்யம் பிறர் இனிமைக்காக.
- ✫ சர்க்காரில் ஒரு ரூபாய் செலவுக்கும் கணக்கு உண்டு, ரசீது தேவை.

  கணக்கெழுதாமல், ரசீது பெறாமல் சர்க்கார் பணம் செலவு செய்ய அனுமதிக்காது.

  போலீஸ் C.I.D. பகுதியில் செய்தி பெற, திருடனைப் பிடிக்க, முக்கியமான விஷயங்களைச் சாதிக்க பணம் கணக்கில்லாமல் செலவாக வேண்டும். கணக்கு எழுதினால், ரசீது போட்டால், இரகஸ்யம் வெளி வந்து காரியம் கெட்டுப் போகும். சட்டம் மாறி அதற்கு இடம் தரும்.

  ❖ *சர்க்காரும் மறைப்பது அவசியம்.*

- ✫ Pride and Prejudiceஇல் டார்சி ஜேன் திருமணத்தைத் தடை செய்ய ஜேன் இலண்டனுக்கு வந்ததை பிங்லியிடம் மறைத்துவிட்டான். பின்னர், அதை எலிசபெத்திடம் கூறினான். **எலிசபெத் ஜேனிடம் கூறவில்லை**. டார்சி பிங்லியிடம் சொல்லி மன்னிப்புக் கேட்டபின் அவன் திருமணம் கூடி வருகிறது. **பிங்லி ஜேனிடம் அவர்கள் திருமணத்தைத் தடை செய்தது டார்சி என்பதைக் கூறவில்லை**.
  - ❖ உண்மைஎன்பது வேறு.
  - ❖ உள்ளத்தின் உண்மை வேறு.
  - ❖ உள்ளத்தின் உண்மை உள்ளத்தைத் தொடும் இடம் நுட்பமானது.

    அது எந்தச் சட்டத்திற்கும் கட்டுப்படாது.

அதன் சட்டத்திற்கு நாம் கட்டுப்பட வேண்டும்.

டார்சியின் செயலை ஜேன் அறிந்தால் வாழ்நாள் முழுவதும் ஜேன் டார்சியை மன்னித்தாலும் அவள் மனம் மன்னிக்காது. அதனால் அவளிடமிருந்து அதை மறைக்க வேண்டியது அவசியம்.

ooo

**994) அன்னையின் சக்தியை ஒரு நிலையில் எழுப்பினால், அதைப் பெறத் தயாரான நிலை அதைப் பெற்றுக் கொள்கிறது.**

***எழுப்பிய சக்தியை ஏற்பது தயாரான நிலை.***

- ✫ உலக வங்கி ஆசிய நாடுகட்கு அபிவிருத்திக்காகப் பணம் கொடுத்தால் அது ஊழல் நிறைந்த அரசியல்வாதிகட்குப் போகிறது.
- ✫ ஆபீசர்கள் நிறைந்த காங்கிரஸை பொது மக்களியக்க-மாக்கினார் மகாத்மா. ஆயிரக்கணக்கான தொண்டர்கள் சர்வ பரித்தியாகம் செய்து இயக்கத்தை வளர்த்தனர். ஓயாமல் போராட்டங்கள் நடத்தினர். உப்பு சத்தியாக்கிரஹம், August 9 போராட்டம், தனி நபர் சத்தியாக்கிரஹம், கிலாபத் இயக்கம், ஒத்துழையாமை இயக்கமென போராட்டங்களும் மகாநாடு-களும் நடத்தி பிரம்மாண்டமான சுதந்திர இயக்கம் எழுந்தது. முஸ்லீம் லீக்குக்கும் போராட்டத்திற்கும் சம்பந்தமில்லை, தியாகம் செய்ய கட்சி அவர்களைக் கேட்கவில்லை. தியாகம், சிறைவாசம் அவரறியாதது. 1935இல் ஒன்றுமில்லாமலிருந்த லீக் 1939இல் பிரம்மாண்டமாக வளர்ந்தது.

***காங்கிரஸ் தியாகம் செய்தது. லீக் வளர்ந்தது.***

- ✫ 1848 முதல் கார்ல் மார்க்ஸ் இங்கிலாந்திலும், ஜெர்மனியிலும் புரட்சி எழ பெரும்பாடுபட்டார். முடிவாக 1917இல் புரட்சி வந்தது. வரும்பொழுது ரஷ்யாவில் வந்தது.



- ✫ சுதந்திரம் பெற்றது காங்கிரஸ். தமிழ்நாட்டை 40 ஆண்டாக ஆள்வது DMK.
- ✫ ஏழைக் குடும்பம் பெரும்பாடுபட்டு மூத்த பிள்ளையைப் பெரிய படிப்பு படிக்க வைக்கின்றனர். சம்பந்தம் வருகிறது. பையன் பெண்ணோடு வெளியேறி குடும்பத்தை மறக்கிறான்.

*படிக்க வைத்தது குடும்பம், பலன் பெற்றது மருமகள்.*

- ✫ இந்தியாவுக்கு கடல்வழி கண்டுபிடித்தது போர்ச்சுகீஸ். இராஜ்யம் நிறுவியது பிரிட்டன்.
- ✫ ஸ்பெயின் நாட்டு கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு-பிடித்தார். அமெரிக்கா பிரிட்டிஷ் காலனியாயிற்று.
- ✫ அரசியல் காரணத்திற்காக ஹர்த்தால் வந்தால் உள்ளூர் எதிரிகள் அந்த நேரம் பழிவாங்கிக் கொள்கின்றனர்.
- ✫ சஞ்சய் காந்தியை பிரதமராக்க தாயார் முழு முயற்சி செய்தார். பிரதமரானது ராஜீவ்.
- ✫ பல்கலைக்கழக ஆசிரியர்கள் 5 பேர் சொஸைட்டியின் அன்பர்கள். அவர்கள் அனைவருக்கும் வைஸ்சான்ஸ்லர் பதவி வந்தது எனக்குத் தெரியும். அத்தனையும் உடனிருந்தவர்க்குப் போய்விட்டது.

எவ்வளவு ஆசையிருந்தாலும் வலிய ஒருவர் மற்றவர்க்குக் கொடுக்க முயன்றால் இயல்பாக பெறுபவரிடமிருந்து எழுவது **உள்ளூர எதிர்ப்பு**. அதனால் அது விலகுகிறது. சொஸைட்டி 1970இல் இரு பெரு விஞ்ஞானிகளை அணுகி நாட்டுக்குரிய திட்டங்களைக் கூறியது. ஒருவர் ஏற்றார். அவர் உலகப் பிரசித்தி பெற்றார். அடுத்தவர் (not ideas, but work) வேலை செய்யக்கூடிய திட்டங்களை மட்டும் ஏற்றார். வேலைக்குப் பேர் ஊதியம் கிடைத்தது. அவர் பெயர் வெளியில் வரவில்லை. 1956இல் சத்தியஜீவியம் வந்தபொழுது சாதகர்கள் எவரும் அதைப் பெறவில்லை. ஆப்பிரிக்காவில் பஸ்ஸில் பிரயாணம் செய்த அன்பர் ஒருவர் கண்டு கொண்டு அன்னைக்கு எழுதினார்.

நாட்டில் இலஞ்சம், அநியாயம் மலிந்து வலிமை பெற்று ஆளும் நேரத்தில் துரோகம் செய்பவர், ஏமாற்றுபவர், பெருவாரியான வெற்றி பெறுவதுண்டு. செய்யும் காரியம் நல்லதானாலும், அது இந்த சூழ்நிலையில் நல்லவர்க்குப் பலிப்பதில்லை. அநியாயக்காரருக்கு பலிப்பதுண்டு. பெறும் அன்பருக்கு நம்பிக்கையிருந்தால் துரோகிகள் செயல் அன்பர் தொழிலை அபிவிருத்தி செய்யும்.

○ ○ ○

**995) அவதாரப் புருஷர், குரு, தலைவர்கள், மேதை ஆகியவர்கள் தங்களை நெருங்கியுள்ள சிஷ்யர்கட்குப் புதியதாக வருபவர்களுடைய சந்தேகம் எழுவதைக் காண முடியும்.**

*புதியவர் சந்தேகம் பழையவருக்கும் உண்டு.*

- ☆ விவேகாநந்தருக்கு கடைசி காலத்தில் குரு மீது சந்தேகம் எழுந்தது.
- ☆ மகாத்மா காந்திக்குக் கடைசி நேரத்தில் அஹிம்சை தவறு எனத் தோன்றியது.

வாழ்நாள் முழுவதும் குடும்பத்திற்காகத் தன்னைத் தியாகம் செய்தவன் கடைசி காலத்தில் குடும்பம் விஸ்வாசமாக இல்லை, தனக்குத் துரோகம் நினைக்கிறது, **செய்த தியாகம் எல்லாம் வீண், இதுவரை நம்பியது பொய் என ஞானோதயம் ஏற்படுகிறது**.

காங்கிரஸ் கட்சிக்காகத் தன்னையும் குடும்பத்தையும் சொத்தையும் தியாகம் செய்தவர் கடைசி நாட்களில் கட்சி ஜனதா என மாறியபொழுது மனம் உடைந்துவிட்டனர்.

காந்தீயவாதி அஹிம்சை, சைவம், மது விலக்கைப் பின்பற்றி கவர்னரானபொழுது ஜனாதிபதிக்கு மீனும், சிகரெட்டும் தரவில்லையென டிஸ்மிஸ் செய்யப்பட்டார்.

அத்தை மகன் படிக்காத கூலிக்காரன். பெண் படித்து ஆசிரியராக இருப்பவள். அனைவர் எதிர்ப்பையும் மீறி அவன்



பிரியத்திற்காக, அவன் திறமை ஒரு காலத்தில் பலிக்கும் என நம்பி அவனை மணந்தாள். வெகுநாள் கழித்து அவன் பிரபலமடைந்து தனக்கு ஸ்டெனோ ஒருத்தியை அமர்த்தினான். அவளை மணந்து காதலுக்காகத் தன்னை மணந்த அத்தை மகளைக் கைவிட்டான். அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது.

- ☆ உலகம் ஆதாயமானது.
- ☆ உத்தமர்களும் ஆதாயமானவர்களா?

உத்தமர்கள் ஆதாயமானவராக இருப்பது பெரும்பகுதி. அப்படி இல்லாமல் இலட்சியமாக இருப்பவர்களும் ஆரம்ப நாளில் இருந்த மனநிலையில் மனித சுபாவத்தின் ஆழத்தை அறியாமல் இலட்சியம் நிறைவேறும் எனச் செய்த காரியங்கள் சரியில்லையென கடைசி காலத்தில் உணர்வதுண்டு. 70 ஆண்டு சோதனைக்குப் பின் சோவியத் ரஷ்யா கம்யூனிசம் சரியில்லை என அறிந்து விலக்கியது. 200 ஆண்டுகளாக சோஷலிஸம் சரியில்லையென ஒதுக்கிய முதலாளித்துவ நாடெல்லாம் இன்று சோஷலிஸமயமாக இருக்கின்றன. தனித்தேயிருப்போம் என சபதமிட்டு 1000 ஆண்டாக ஒதுங்கியிருந்த ஜப்பான் தனித்திருக்க முடியாது என முடிவு செய்து உலகுடன் இணைந்து பணக்கார நாடாகியது.

- ☆ **இலட்சியம் வெற்றி பெறாது, நடைமுறை வெல்லும் என உலகம் முடிவாக அறிந்ததைப் புறக்கணித்த இலட்சியவாதிகள் அனைவரும் கடைசி நாட்களில் மனம் உடைந்தனர்**.
- ☆ பகவான் ஸ்ரீ அரவிந்தரையும் அன்னையையும் நாடி வந்த எவருக்கும் அந்த ஏமாற்றமில்லை. வந்தவர்கள் இலட்சியம் எதுவானாலும் - ஆன்மீகம், அரசியல், பொது வாழ்வு, குடும்பம் - வந்தவுடன் அவர்கள் இலட்சியம் இரு மடங்காகப் பூர்த்தியாகிவிடுகிறது. அதற்கு விதிவிலக்கில்லை.
- ☆ அன்னையை மறந்தவர், விலகியவர், வெறுத்தவர், துரோகம் செய்தவருக்கு இலாபத்தில் நஷ்டம் வருமே தவிர நஷ்டம் ஏற்பட்டது என்பதேயில்லை. துரோகம் செய்தவருக்கு தவறாது துரோகத்தின் பலன் உண்டு.

☆ மனித சுபாவம் இலட்சியமானதில்லை. அது பழைய நிலையை விரும்பும். அவதார புருஷர்கள், குரு, தலைவர் ஆகியவருடன் நெருங்கியுள்ளவர் இலட்சியம் தோல்வியடைவதைக் கண்டு புதியவர் போல் கேள்வி எழுப்புவார்கள்.

☆ மனித சுபாவம் தோற்கும்.
மனித இலட்சியம் இலட்சியமற்றவரிடையே தோற்கும்.
இலட்சியவாதிக்கு இலட்சியம் தோற்பதில்லை.
பாசமும், பற்றும் தோற்கும்; இலட்சியம் தோற்காது.
நியாயம், தர்மம் தோற்கும்; இலட்சியம் தோற்காது.
இலட்சியத்தை அலட்சியம் செய்தவர்க்கு இலட்சியம் தோற்கும்.
இலட்சியத்தை இலட்சியமாகப் போற்றியவர்க்கு இலட்சியம் தோற்றதில்லை.

*தொடரும்.....*

❀ ❀ ❀

**ஜீவிய மணி**

**நாட்டை ஆள்வது நாகரீகமன்று,**
**நல்லவனைக் கடந்த நடைமுறை.**

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

உள்மனதின் ஆழத்தைத் தொடுவதே பகவான் தேடிய சூட்சும இரகஸ்யம்.

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: N. Asokan

# க்ஷணத்தில் பலிக்கும்

Instantaneous miraculousness க்ஷணத்தில் பலிக்கும் என்ற கருத்து *The Life Divine*இல் இரண்டாம் புத்தகத்தில் 26ஆம் அத்தியாயத்திலிருக்கிறது. அதற்குரிய நிபந்தனைகளில் ஒன்று சிறியது, பெரியதை அறிவுடன் ஏற்றுப் பணிவது.

மனிதன் தான் எப்படி மலர வேண்டும்என நினைக்கும்பொழுது தொட்டதெல்லாம் பொன்னாக வேண்டும், செய்வதெல்லாம் கூடிவர வேண்டும், ஆசைப்பட்டதெல்லாம் நிறைவேற வேண்டும், நினைத்ததெல்லாம் நடக்க வேண்டும்என நினைப்பான். சிலர் அதுபோல் பேசுவதும் உண்டு. மனித வாழ்வு அஞ்ஞானத்தில் உழல்வது, அகந்தையால் செயல்படுவது, காலத்தின் கதிக்குட்பட்டது. இந்தக் கருத்தை எடுத்து அன்பர் வாழ்வில் விளக்க வேண்டுமானால், அன்பர் ஞானத்தில் செயல்பட்டால், அகந்தையற்ற வாழ்வை மேற்கொண்டால், காலத்திற்குத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாவிட்டால் இவை நடக்கும் என்று கூறலாம். அந்நிலையை *silent will* மௌன சக்தி எனலாம், மௌனத்தைக் கடந்த மௌனம் எனவும் கூறலாம்.

❋ நினைத்தன எல்லாம் நடக்க - நினைவைக் கடந்த நிலை வேண்டும்.

❋ ஆசைப்பட்டதெல்லாம் பூர்த்தியாக - ஆசையை வெல்ல வேண்டும்.

❋ செய்வது கூடிவர - செயலுக்குப் பூரணமில்லைஎன்ற பொறுமை வேண்டும்.

இவற்றையெல்லாம் மொத்தமாகக் கருதுவது ***தொட்டதெல்லாம் பொன்னாவது***.

*Pride and Prejudice*இல் காலின்ஸ் தன் வருமானம் £2000 என்பதில் பெருமைப்பட்டு எலிசபெத்தை மணக்கும்படிக் கேட்கிறான். இப்படிப்பட்ட கோமாளிக்குத் தன் மீது ஆசை வந்ததிற்காக அவள் அருவெறுப்புப்பட்டு அவஸ்தைப்பட்டு மறுக்கிறாள். அவன் பெருமை புண்படுகிறது. தன் நிலையை அவனால் ஏற்க முடியவில்லை. ஆனால் எலிசபெத்தின் மறுப்பை ஏற்று Mrs. பென்னட்டிடம், "எலிசபெத்தின் மறுப்பை நான் ஏற்கிறேன்" என்கிறான். அச்செயல் மூலம் "எலிசபெத் என்னை மட்டமாக நினைப்பதை ஏற்கிறேன்" என்ற மனநிலைக்கு வருகிறான்.

❋ சிறியது பெரியதை விரும்பி ஏற்பது க்ஷணத்தில் காரியம் நடக்க உதவும்.

காலின்ஸ் என்ற கோமாளி, எலிசபெத்தின் பெருமையை செயலால் ஏற்கிறான். அவனுக்குள்ள பிரச்சினை லேடி காதரீனுக்கு என்ன பதில் சொல்வது என்பதே. எங்கே உன் மனைவி என அவர் கேட்பார் என்பதே அவனுக்குரிய எண்ணம்.

❋ அதே நிமிஷம் ஷார்லோட் அங்கு வந்தாள்.

காலின்ஸ் உடன் ஆறுதலாகப் பேசினாள். எலிசபெத் மனப்பூர்வமாக நன்றி தெரிவித்தாள். ஷார்லோட் தன் வீட்டிற்குக் காலின்ஸ்ஸை அழைத்துப் போனாள். மறுநாள் அதிகாலையில் அவர்கள் திருமணம் முடிவாகிறது. அன்பர்கள் இம்மனநிலையை ஏற்றால் இதுபோல் நடப்பதைக் காணலாம்.

❀❀❀

# அனுமதியின்றி வாழ்க்கை செயல்படாது

மகாபாரதத்திலில்லாதது உலகிலில்லைஎன்ற வழக்கை நினைக்கும் பொழுது அக்காவியத்தின் பெருமை விளங்கும். நமக்கு எந்தத் தவறு நிகழ்ந்தாலும் கூர்ந்து ஆழ்ந்து கவனித்தால் நாம் இடம் கொடுக்காமல் அது நடந்திருக்காதுஎன்று பகவான் கூறுகிறார். இக்கூற்று பாரதத்திலுள்ளதாஎன அறிய எனக்கு ஆர்வமுண்டு.

1956இல் நான் கடலூர் கிருத்துவப் பள்ளியில் ஆசிரியரானேன். அடுத்த ஆண்டு ஓர் ஆசிரியர் பள்ளியை விட்டுப் போனார். அது அடுத்த வகுப்பு ஆசிரியர். அந்த இடத்திற்கு என்னை நியமிக்க வேண்டும். அது பிரமோஷன். நேரம் வந்தபொழுது என் நினைவில் அது இல்லை. தலைமை ஆசிரியர், "உங்களுக்கு பிரமோஷன் வருகிறது. நான் அதை அடுத்தவருக்குத் தர விரும்புகிறேன். உங்களுக்குச் சம்மதமா?" எனக் கேட்டார். இது உலகிலில்லாத நிகழ்ச்சி. எனக்கு அவர் கேட்டது சரியில்லை எனப்பட்டது. என்றாலும் என் சம்மதம் தெரிவித்தேன். அடுத்த ஆண்டு மீண்டும் எனக்குப் பிரமோஷன் வந்தது. இம்முறை என்னைக் கேட்காமல் வேறொருவருக்குக் கொடுத்துவிட்டார். இவை எவருக்கும் பெரிய விஷயம். நான் குறைபடவில்லை. ஆனால் தலைமை ஆசிரியர் தவறு செய்கிறார்என நினைத்தேன். இன்று இவை நடந்து 50 ஆண்டுகளாகின்றன. இந்நிகழ்ச்சிகள் என் நினைவை விட்டே அகன்றன. சுமார் 20 ஆண்டிற்கு முன் கடந்த கால சமர்ப்பணத்தில் இவை எழுந்தன. பகவான் கூற்றுப்படி இதற்கு நான் எப்படிக் காரணம் என நினைத்துப் பார்த்தேன். விளங்கவில்லை. பல ஆண்டுகள் கழித்துப் புரிந்தது. 1950இல் நான் ஆசிரியர் பயிற்சி பெறாமல் 4 ஆண்டுகள் வேலையிலிருந்தபொழுது என் நண்பர்கள் வருஷம்தோறும் நான் 16,17,18 நாள் casual leave லீவு எடுப்பதைச் சுட்டிக்காட்டினர். 15 நாளுக்கு மட்டுமே அனுமதி. கடலூர் வந்த பின் முதல் ஆண்டு நண்பர்கள் அனைவரும் "இப்பள்ளியில் நாங்கள் அனைவரும் 5 அல்லது 6 நாள் லீவு எடுக்கிறோம், எப்படி நீங்கள் 17 நாள் எடுக்கலாம்?" எனக் கேட்டபொழுதுதான் நான் இதை அறிந்தேன். சர்க்காரில் 1 நாள் அதிகமாக லீவு எடுத்தாலும் அது சீனியாரிட்டியை பாதிக்கும், அது பிரமோஷனைப் பாதிக்கும். எங்கள் பள்ளியில் தலைமை ஆசிரியர் பதவி பாதிரியாருக்குத்தான் உண்டு. அப்பதவியை மற்றவர் எட்டப்போவதில்லை. நான் அதனால் அதிகபட்ச லீவைப் பொருட்படுத்தவில்லை. 15 நாள் லிமிட் தாண்டி லீவு எடுக்கும் என் பழக்கத்தை நான் மாற்றவில்லை.

✻ இந்த விஷயம் தற்சமயம் எனக்கு நினைவு வந்தது.

✻ என் தலைமை ஆசிரியர் எனக்குத் தவறு செய்யவில்லை. வாழ்க்கை என் போக்கை இப்படிக் கண்டித்ததுஎன நான் புரிந்து கொண்டேன். ***காரணமின்றி எதுவும் நடக்காதுஎன பகவான் கூறிய உண்மை புரிந்தது***.

✻ அன்பருக்கு அன்னை எந்த நல்ல காரியத்திற்கும் தவறாது பரிசு தருவார்.

✻ 10 ஆண்டு சர்வீஸுக்குப்பின் இனி பிரமோஷனே தேவையில்லாதபடி நான் பள்ளியை விட்டு வந்தேன். அது வாழ்வு தந்த பெரிய பிரமோஷன்.

❀❀❀

**August 2010** Jiviyam 16 Malar 4
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11
Price: Rs.5/- WPP No.45/09-11

**புதிய வெளியீடுகள்**

**கர்மயோகியின்**

| | |
|---|---|
| **அன்னையின் ஆன்மீகப்பரிசு** | ரூ.100/- |
| **லைப் டிவைன் - கருத்துகள்** | ரூ.100/- |
| **பரம்பொருள் III** | ரூ.200/- |
| **எங்கள் குடும்பம்** (பாகம் 2) | ரூ.250/- |
| **உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம்** | ரூ.100/- |
| **யோக வாழ்க்கை விளக்கம் IV** | ரூ.150/- |

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

| | |
|---|---|
| **லைப் டிவைன் விரிவுரைகள்**<br>*தமிழாக்கம்:* என். அசோகன் | ரூ.100/- |
| **SATYA JYOTHI**<br>**(CONCISE TRUISMS)**<br>**N.Asokan** | ரூ.200/- |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2210514

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
“சுந்தரம்”,
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை - 600 035.
✆: (044)-24347191